விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆவணி 3 ஜுலைகஜ் 2 இதழ் 190
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 19-8-1985

## மடு ரயில் நிலைய சுற்றுடல் பகுதியில் தாக்குதல்!

### இருவர் பலி; பலர் காயம்!!

(அலுவலக நிருபர்)

மடுரயில் நிலையப் பகுதியில் குடியிருந்தவர்கள் மீது இடம் பெற்ற தாக்குதல் சம்பவத்தில் இரு பெண்கள் கொல்லப்பட்டனர். மூவர் படுகாயமடைந்தனர். வேறொரு இளம் பெண்ணும், சிறுவனும் உட்பட பலர் காணாமல் போய் விட்டனராம். அத்துடன் பஸ் நடத்துநராக இருந்து கொலை செய்யப்பட்ட வில்லியம் என்பவருக்குச் சொந்தமான ஹோட்டலும் வீடும் தீவைத்து எரிக்கப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு 9-30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இச்சம்பவத்தின் போது பீதியடைந்த 27 குடும்பங்களைச் சேர்ந்த 88 பேர் காடுகளுக்குள் பதுங்கிக் கொண்டதாகவும், இவர்கள் நேற்று ஆயு

(8-ம் பக்கம் பார்க்க)

# மன்னர் - கொழும்பு மெயில் ரயில்

# ஆயுத முனையில் கடத்தப்பட்டது!

(அலுவலக நிருபர்)

மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட இரவு மெயில் ரயில்வண்டியை மதவாச்சிவரை தமிழ்த் தீவிரவாதிகளைக்கொண்ட கோஷ்டியினர் துப்பாக்கி முனையில் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

நேற்று முன்தினமிரவு இக் கடத்தல் சம்பவம் இடம்பெற்றது.

மன்னார் ரயில் நிலையத்தில் ஏறிக்கொண்ட தமிழ்த் தீவிரவாதக் கோஷ்டியினர், இந்த மெயில் ரயில் வண்டியின் எஞ்ஜின் சாரதியையும், கடைசிப் பெட்டியிலிருந்த ரயில் பாதுகாப்பு ஊழியரையும் துப்பாக்கி முனையில் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததாகவும், ரயில் தரித்துநின்ற இடங்களில் அக்கோஷ்டியினரில் சிலர் ரயிலின் வெளியில் இறங்கி நின்றுவிட்டு அது புறப்படும் பொழுது அவர்களும் ஏறிக் கொண்டுசென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ரயில்வண்டி மதவாச்சியை அண்மித்தபொழுது ஆயுதப் படையினர் மதவாச்சி ரயில் நிலையத்தில் நின்றுகொண்டிருந்தது தெரியவந்துள்ளதாகவும், அதேசமயம் ரயில்வண்டி பாதையைவிட்டுச் சற்று விலகியதால் பிரயாணம் தொடர முடியாமல் தடைப்பட்டதைத் தொடர்ந்து தீவிரவாதிகள் அவ்விடத்தில் ரயிலிலிருந்து குதித்துத் தலைமறைவாகிவிட்டதாக

(8-ம் பக்கம் பார்க்க)

# திம்பு பேச்சை மீள ஆரம்பிக்க

# இந்தியா தீவிர முயற்சி!

## மெயில் ரயில் சேவை நிறுத்தம்!

(கொழும்பு)

"நாட்டின் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களுக்கான சகல

(8-ம் பக்கம் பார்க்க)

## ஓரிரு தினங்களில் மீண்டும் ஆரம்பமாகலாம்?

புதுடில்லி)

'திம்பு' சமரசப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சாத்தியம் அரிதாகவே காணப்படுகிறது. இருந்தபோதிலும் இப்பேச்சுக்களில் இருசாராரையும் தொடர்ந்து ஈடுபடுத்துவதற்கு இந்தியா தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது" என்று இந்திய வெளியுறவு இணைச்செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி திம்புவில் வைத்துக் கருத்து வெளியிட்டுள்ளார்

திரு. பண்டாரியின் இக்கருத்தையடுத்து 'திம்பு' பேச்சுக்கள் இன்னும் சிலதினங்களில் மீண்டும் ஆரம்பமாகலாம் என அறியப்படுகிறது

இலங்கை அரசதரப்பினருக்கும் தமிழ்க் குழுக்களுக்குமிடையே நடைபெற்ற இரண்டாவது சுற்று திம்பு சமரசப் பேச்சுக்கள் நேற்று முன்தினம் முறிவடைந்தன.

இதனையடுத்து இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு ரொமேஷ்பண்டாரி, இருசாராருக்குமிடையே சமரசத்தை ஏற்படுத்தபூட்டான் சென்றார்

அங்கு அவர் தமிழ்க்குழுக்களின் பிரதிநிதிகளுடன் அவர்களது நிலைப்பாட்டை மாற்றஞ்செய்யும் வகையில் தீவிரமாகப் பேச்சுக்கள் நடத்தினார்.

ஆயினும் இந்த இரண்டாவது சுற்றை முறித்துக்கொண்டமைக்கான அவர்கள் தெரிவித்த காரணங்கள் திரு பண்டாரியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகின்றது

புதிய திட்டங்களை இலங்கை அரசு முன்வைக்கத் தவறியமை, வவுனியாவில் அப்பாவித் தமிழ் மக்கள் பெருமளவில் கொல்லப்பட்டமை ஆகியனவே தமிழ் குழுக்கள் 'திம்பு' பேச்

(8-ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் பங்குபற்ற தமிழ்க் குழுக்கள் முடிவு! - அல்விஸ் கூறுகிறார்

(கொழும்பு)

திம்புப் பேச்சுக்களில் மீண்டும் பங்குபற்ற தமிழ்க் குழுக்கள் முன்வந்துள்ளன என்று இராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் தெரிவித்தார்.

தமிழ்க் குழுக்கள் பேச்சுக்களை முறித்துக்கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளபோதிலும் அவை தற்போது தமது நிலையை மாற்றியுள்ளன. இத்தகவலை திம்புவிலிருந்து எச். டபிள்யூ ஜெயவர்த்தனா நேற்றுக் காலை தெரிவித்ததாக அமைச்சர் மேலும் கூறினார்.

## தமிழ்க்குழு திம்புவிலிருந்து வெளியேறவில்லை - இந்தியஸ்தானிகர் டிக்ஸிற்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக திம்புவில் பேச்சுக்கள் நடத்திய தமிழ் குழுக்கள் தொடர்ந்தும் திம்புவிலேயே இருந்து வருகின்றன அவை பூட்டானைவிட்டு வெளியேறவில்லை என்று இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே. என் டிக்ஸிற் தெரிவித்துள்ளார்.

பேச்சுக்கள் குறித்துநேற்று மாலை கொழும்பில் நடத்திய

8 ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கடத்தப்பட்ட 40 மீனவர்களும் கொலை?

### இராஜாங்க அமைச்சு தகவல்

(கொழும்பு)

கடந்த 13-ம் திகதி திருமலையில் கடத்தப்பட்ட 40 நீர்கொழும்பு மீனவர்களும் கொலைசெய்யப்பட்டிருக்கலாம் என்று இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

குச்சவெளிப் பகுதியிலுள்ள கோவாலம் என்னுமிடத்தில் இம்மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது உயிருடன் தீமூட்டிக் கொல்லப்பட்டிருக்கலாம்

8-ம் பக்கம் பார்க்க)

## நகை அடகுப் போராட்டம் முதல் கட்ட வெற்றி!

### கன்னாதிட்டி மக்கள்வங்கியில் இன்றுமுதல் நகைகள் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

நகை அடகுவைத்தோர் சங்கம், யாழ் மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளின் முன்பாக நடத்திய மறியல்போராட்டத்தின் விளைவாக முதற்கட்ட வெற்றி கிடைத்துள்ளது

யாழ் கன்னாதிட்டி மக்கள் வங்கி கிளையில் தமது நகைகளை மீட்கப் பணம் செலுத்தியவர்களுக்கு இன்று தொடக்கம் இவ் வாரம் முடிவதற்குள் நகைகளைப் பெற்றுக்கொள்ளும்படி மக்கள் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் திரு. என் சரவணபவானந்தன் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த 9ம் திகதி தொடக்கம் நகைகளை அடகுவைத்தோர் சங்கம் எடுத்த தீவிர

(8-ம் பக்கம் பார்க்க)

## வாழ்வாயினும், சாவாயினும் போராட்டம் தொடரும்!

### ஈ. தே. வி. முன்னணி அறிக்கை

(சென்னை)

"வாழ்வாயினும், சாவாயினும் தமிழீழப் போராட்டம் தொடர்ந்து நடத்தப்படும். இவ்விடுதலைப் போராட்டத்தில் வெறுமனே இறப்பதை விட போராடி இறப்பதே மேல்" என்று 'ஈழத் தேசிய விடுதலை முன்னணி' அறிவித்துள்ளது

திம்பு 2-வது சுற்றுப்பேச்சுக்கள் முறிவடைந்ததையடுத்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

## திருமலை துவரங் காட்டில் 21 தமிழர் கொலை!

(திருகோணமலை)

திருகோணமலையிலுள்ள துவரங்காட்டு பகுதியில் 21 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்

(8-ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## தேவை

அண்மைக் காலங்களில் வெளியான ஆங்கில, தமிழ் பக்தி வீடியோப் படங்களும், பழைய படங்களும், [ஆங்கில தட்டச்சு யந்திரமும்] தேவை. உடன்தொடர்பு கொள்ளவும்: கவிதா வீடியோ கிளப், 550/6, கே.கே.எஸ்.ரோட், தட்டா தெரு சந்திக் அண்மையில், யாழ்ப்பாணம். 97

ஊறணி வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள லக்ஷ்மி பேக்கறிக்கு அனுபவமுள்ள பாண், பிஸ்கற் மற்றும் பொருட்களை தயாரிக்கக்கூடிய வேலையாட்கள் தேவை. இந்திய வம்சாவழியினர் விரும்பத்தக்கது. நேரில் வரவும் சைக்கிளில் விநியோகம் செய்யக் கூடியவரும் தேவை. லக்ஷ்மி பேக்கறி, ஊறணி, வல்வெட்டித்துறை. 103

## சோதிடம்

உங்கள் எதிர்கால பலனை உண்மையாக அறிந்து கொள்ள சாதகத்துடன் விஜயம் செய்யுங்கள். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம் 52/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 63

### வைத்தியம்

மூலவியாதிகள், பாரிசவாதம், முழங்கால் வாதம் போன்ற வாதரோகங்களுக்கும் பீனிசம், எக்ஸிமா, சரும வியாதிகள், தொய்வு, கண் ரோகங்கள், நரம்புத்தளர்ச்சி, மாதவிடாய் கால உபத்திரவங்கள், குழந்தைப் பேற்றின்மை, குழந்தைகள் சம்பந்தமான சகல வியாதிகளுக்கும் இத்த ஆயுர்வேத முறைப்படி விஷேசமான சிகிச்சை பெறலாம், Dr. மங்களாம்பிகை D,A.M, மங்களபதி வைத்தியசாலை, 41/5, அரசவீதி, சங்கிலியன்வீதி, நல்லூர். (4882

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்

வயிரமுத்து ஆண்டியப்பா,
விநாயகமுதலியார் ரோட்டு, பருத்தித்துறை.

ஈட்டு இலக்கம்: 6588 வழக்காளி

எதிராக

1. கனகலிங்கம் இராஜலிங்கம் துரைரத்தினம்
2. பெண் கிருஸ்ராபெல்லி இருவரும்

வசந்தம, மானிப்பாய்.

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் மேற்படி 6588ம் இலக்க வழக்கில் எனக்குக்கொடுக்கப்பட்ட அதிகாரத்தின்படி பின்னால் ஆதன இடாப்பில் விபரிக்கப்படும் ஆதனங்களை 1985ம் ஆண்டு ஆவணி மாதம் 28ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10-30 மணியளவில் அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 26041/66வும் மேலும் ரூபா 25000/- வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1983ம் ஆண்டு பங்குனிமாதம் 02ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1984ம் ஆண்டு மாசி மாதம் 01ம் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீதவட்டியும் வழக்குச் செலவு ரூபா 2335/10, (இதில் நடைபெற்ற செலவு ரூபா 1523/10 நடைபெற வேண்டிய செலவு ரூபா 366/- மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 446/- கொடுக்கவேண்டியிருப்பதால்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், பச்சிலைப்பள்ளி கோவிற்பற்று, தம்பகாமமும் முள்ளிப்பற்று கோயிற்பற்றுவும் முகாவிலும் மாசாரும் களிக்கரைக்காடு ஏக்கர் 50. இது 28-09-1957ல் நில அளவையாளர் க. வேல்முருகுவால் 3280ம் இலக்கத்தில் விஸ்தரிக்கப்பட்ட படத்தின்படி 1-40-ஆர்-1, ஆர்-4, எவ்-1, எவ்-7 என்னும் துண்டுகளாக விபரிக்கப்பட்டிருக்கிறது. இதில்

1. 27ம் துண்டுக்கு ஏக்கர் ½ எல்லை கிழக்கு ஆர்-3 என்ற துண்டு வடக்கு 28ம் துண்டு. மேற்கு ஆர்-2 என்ற துண்டு தெற்கு 26ம் துண்டு. இதடங்கலும். ஆர்-1, ஆர்-2, ஆர்-3, ஆர்-4 என்றதுண்டுகளில் 1/40 பங்கும் 25-09-1957ல் உலாந்தா மேஸ்தர் கி. கந்தையா என்பவரால் அளந்து விஸ்தரிக்கப்பட்ட 375ம் இலக்கப் படத்தில் கண்ட 3ம் துண்டில் 1/80 பங்கும்.

2, எவ்-6 என்ற துண்டுக்கு 4ஏக்கர் 1 றூட் 26½பேட்ஸ் இதற்கு எல்லை கிழக்கு எவ்-5 என்ற துண்டு வடக்கு சிறுகள்ளி மேற்கு எவ்-7 என்ற துண்டு தெற்கு ஆர்-4 என்ற துண்டு இதடங்கலும்.

3. 28ம் துண்டுக்கு ஏக்கர் ½ எல்லை கிழக்கு ஆர்-3 என்ற துண்டு வடக்கு 29ம் துண்டு மேற்கு ஆர்-2 என்ற துண்டு தெற்கு 27ம் துண்டு இதடங்கலும். ஆர்-3 ஆர்-4 என்ற துண்டுகளில் தனித்தனி 1/40 பங்கும், மேலே சொல்லப்பட்ட 3ம் துண்டுகளில் 1/80 பங்கும்.

4. எவ்-5 என்ற துண்டுக்கு ஏக்கர் 4 றூட் 1 26½ பேட்ஸ் எல்லை கிழக்கு எவ்-4 என்ற துண்டு வடக்கு சிறுகள்ளி மேற்கு எவ்-6 என்ற துண்டு தெற்கு ஆர்-4 என்ற துண்டு இதடங்கலும் ஆர்-5 என்ற துண்டில் 1/40 பங்கும்.

5. 14ம்துண்டுக்கு ஏக்கர் ½ எல்லை கிழக்குரோட்டு வடக்கு 15ம் துண்டு மேற்கு 34ம் துண்டு தெற்கு 13ம்துண்டு இதடங்கலும். ஆர்-1, ஆர்-2, ஆர்-3, ஆர்-4 என்ற துண்டுகளில் தனித்தனி 1/40 பங்கும், மேற்சொல்லப்பட்ட 374ம் இலக்கப் படத்தில் கண்ட 3ம் துண்டிலும் 1/80 பங்கும்.

6. எவ்-4 என்ற துண்டுக்கு ஏக்கர் 4 றூட் 1 பேட்ஸ் 26½ எல்லை கிழக்கு எவ்-3 என்றதுண்டு வடக்கு சிறுகள்ளி மேற்கு எவ்-5என்ற துண்டு தெற்கு ஆர்-4என்ற துண்டுஇதடங்கலும்.

சி. த. சுப்பிரமணியம்,
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்.

பெரியரசடி,
சங்கத்தானை,
சாவகச்சேரி, 29-6-85; 120

## தேவை

மாவடி ஞான வைரவர் கோவிலுக்கு 3 கால பூசைக்கு குருக்கள் தேவை. விபரங்களுடன் நேரில் வரவும். [வயதில் மூத்தவர்கள் விரும்பத்தக்கது] மு.கனகரட்ணம், 175, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 110

நல்ல நிலையிலுள்ள வோக்ஸ் வகன் கார் தேவை. தொடர்பு கொள்ளவும்:-91, பலாலி வீதி, திருநெல்வேலி. தொலைபேசி இல:23598. 115

## விற்பனைக்கு

மினி சினிமாவுக்கு உரிய 45 மைப் கதிரைகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- செ. கோபாலு, மெயின்வீதி, சங்கானை. 57

மட்டுவில் தெற்கில் 8½ பரப்புக் காணியும் நுணாவிலில் 190 மைல் கல் அருகாமையில் 6½ பரப்புக் காணியும் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு; என்.சிவராசா, சந்தியா ஏஜென்சி, சாவகச்சேரி 98

சோனி ஸ்பீக்கர்களுடன்கூடிய நல்லநிலையிலுள்ளஸ்ரீரியோ கசெற் செற் விற்பனைக்குண்டு. தொடர்பு:-ஆர். செல்வம், 16/1 ஏ, பண்டாரிக்குளம் வீதி, நல்லூர். 114

சந்நதிரோட், பத்தைமேனி, அச்சுவேலி சந்திக்கு கிட்டிய தூரத்தில் வீடு கட்டுவதற்கு வெற்றுக்காணி 7½ பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: செல்லத்துரை, ஸ்பெசல் என்ஜினியர்ஸ், இல:8, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 113

வட்டு மேற்கு வட்டுக்கோட்டை காளியம்மன் கோவிலுக்கருகாமையில் 4 பரப்பு காணியும் வீடும் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: த. கிட்டினர், காளிகோவிலடி, மல்லாகம். 123

## நிர்வாக அதிகாரி

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் புதிய நிர்வாக அதிகாரியாக திரு. ரீ. ஏ. அரியரெட்ணம் நியமிக்கப்பட்டுள்ளார்.

## இடம்பெயர்ந்த ஆசிரியர்கள்: விசேடலீவு வழங்குமாறு கோரிக்கை

(கல்வியங்காடு)

ஜூலை மாதத்திலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மாதவேதனத்தைத் தருமாறு கோரி குழுவொன்று கல்வி அமைச்சரைச் சந்திக்க முடிவு செய்துள்ளது.

இடம்பெயர்ந்த அநுராதபுர ஆசிரியர்கள் திரும்பவும் வேலைக்குப் போகக்கூடிய பாதுகாப்பான சூழ்நிலை இல்லை என்பதால், பாதுகாப்புள்ள நிலைமை ஏற்படும்வரை அவர்களுக்கு விசேட லீவு வழங்கப்படவேண்டும் என்றும், 1985 ஜூலைமாதத்திலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மாதவேதனத்தை தொடர்ச்சியாகத் தமக்குத்தரவேண்டும் எனவும் கல்வி அமைச்சரை நேரில் சந்தித்துக் கேட்பதற்காக இ. த. ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு உறுப்பினர், அநுராதபுர ஆசிரியர் குழு உறுப்பினர் ஆகியோரடங்கிய குழுவொன்று இவ்வாரம் கொழும்பு செல்லவிருக்கிறது.

## கடலில் பலியான மீனவர் குடும்பத்துக்கு அமைச்சர் நிதியுதவி

(புதுடில்லி)

இலங்கை ஆயுதப்படையினரால் அடித்துக்கொல்லப்பட்டு கடலில் தூக்கியெறியப்பட்ட ராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர் ஜோசப் இல்லத்திற்குச் சென்று அவரின் மனைவிக்கும், குடும்பத்தாருக்கும், வேலைவாய்ப்பு மறுவாழ்வுத் துறை அமைச்சர் திரு. வி இராமசாமி ஆறுதல் கூறி தமது சொந்தப்பணத்திலிருந்து ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கினார்.

தமிழக, மத்திய அரசு கொடுக்கும் மீனவ நிவாரண உதவிகளை கொல்லப்பட்ட திரு. ஜோசப்பின் மனைவிக்கும், 2 வயது மற்றும் 6 மாத ஆண்குழந்தைகளுக்கும் உடன் கிடைக்கச் செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் பணித்துள்ளார். (ஐ)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி செருக்கல் அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 21-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும். (ச)

## ஸ்ரீ வரதராஜர் திருவிழா

(சுழிபுரம்)

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோவில் திருவிழா இம் மாதம் 22ம் திகதி வியாழக்கிழமையே ஆரம்பமாகின்றது.

வியாழக்கிழமை காலை கொடியேற்றமும் செப்டம்பர் 7ம் திகதி சனிக்கிழமை தேர்திருவிழாவும். நிகழும் தேர்த்திருவிழா அன்று நண்பகல் உறியடி உற்சவமும் 8ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நிகழும்.

## திருமண அறிவித்தல்

| மணமகன் | மணமகள் |
|---|---|
| செல்வன் ஜெயசீலன் | செல்வி சந்திரகௌரி |
| (இலத்திரனியல் பொறியியலாளர், அவுஸ்திரேலியா) | (யாழ். மருத்துவபீடம்) |

19-08-85 இன்று நண்பகல் அவுஸ்திரேலியாவில் இந்து கலாசார முறைப்படி திருமணம் நடைபெறுகிறது என்பதை அறியத்தருகின்றோம்.

| | |
|---|---|
| சிதம்பரப்பிள்ளை | குமாரவேலு |
| தம்பதிகள், | தம்பதிகள். |
| "ஜெயந்தி இல்லம்", | "கௌரி இல்லம்", |
| ஆத்தியடி, | புலோலி கிழக்கு, |
| பருத்தித்துறை, | பருத்தித்துறை. |

(117)

## நவீன தொழில் ஸ்தாபன திறப்பு விழா

### Wood Engineers & contractors

யாழ். நகரில் நவீன கனரக இத்தாலிய இயந்திரத்துடனான எமது புதிய

**வூட் எஞ்ஜினியேர்ஸ் அன் கொன்றக்ரேஸ்**

என்னும் ஸ்தாபனம் 19-8-85 திங்கட்கிழமை பகல் 11 மணியளவில் வரும் சுப நேரத்தில்

தொழிலதிபர் **திரு. N. காசி விசுவநாதன்**
(EVEREST INDUSTRIES) அவர்களாலும்

விரிவுரையாளர் **திரு. K. கிருபானந்தன்** [B. Phil]
(யாழ் / பல். தொழில் நுட்பக் கல்லூரி) அவர்களாலும்

ஆரம்பித்து வைக்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
இராசையா சந்திரசிறீ
5, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (126)

# பஞ்சாப் மாநிலத்தில் அடுத்தமாதம் 22-ல் தேர்தல்கள்!

## பல தலைவர்கள் வரவேற்பு!

(புதுடில்லி)

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் லோக்சபா மற்றும் சட்டமன்றத் தேர்தல்கள் அடுத்த மாதம் 22-ம் திகதி நடைபெறும் என்று தேர்தல்கமிஷன்நேற்று முன்தினம் அறிவித்தது.

இதுசம்பந்தமான முறையான அறிவிப்பு இம்மாதம் 23ம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். வேட்பு மக்களுள் இம்மாதம் 30ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப் படும்.

இந்திப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நேற்றுமுன்தினம் பஞ்சாப் மாநிலத்துக்கு விஜயம செய்த சில மணிநேரத்தின் பின்னர் இந்த தேர்தல் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் இடம்பெற்ற இந்தியப்பொதுத் தேர்தலின் பின்னர் இரண்டாவது தடவையாக பஞ்சாப்புக்கு விஜயம்செய்த இந்தியப் பிரதமருக்கு அங்கு பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டது. மத்திய பஞ்சாப்பிலுள்ள 'குசைன்பூர்' பகுதிக்கு சென்ற இந்தியப் பிரதமரை சுமார் 25,000 மக்கள் வரவேற்றனர்.

பஞ்சாப்பில் திரு. ராஜீவ் காந்திக்கு கிடைத்த அமோக வரவேற்பு பஞ்சாப் பிரச்னையைத் தீர்த்துவைத்தமை குறித்து மக்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள் என்பதனை எடுத்துக்காட்டுகிறது என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்திய அரசுக்குப் பெரும் சிக்கலைக் கொடுத்துவந்த பஞ்சாப் பிரச்னை கடந்த மாதம் 24ம் திகதி இந்தியப் பிரதமருக்கும் அகாலிதள் தலைவர் சந்ஹர்ஜன்சிங் லோங்கோவாலுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கையினால் தீர்த்து வைக்கப்பட்டதுஎன்பதுதெரிந்ததே.

இதேவேளை பஞ்சாப்பில் தேர்தல்கள் நடைபெறுவதற்கான அறிவிப்பு குறித்து பல ஆளும்கட்சித் தலைவர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் வரவேற்றுள்ளனர்.

## ரூபவாஹினி

மாலை
5-00 செய்திகள்.
5-05 கிமான் நிகழ்ச்சிகள்.
5-30 விஸன் தொடர் நிகழ்ச்சி.
6-00 சிறுவர் நிகழ்ச்சி.
6-30 செய்திகள் [தமிழ்]
6-55 சங்கீத நிகழ்ச்சி.
7-25 நைட் ரீட்டர் நிகழ்ச்சி.
8-00 செய்திகள் (சிங்களம்)
8 20 தொடர் நிகழ்ச்சி.
8-40 வெளியுலக அறிக்கை [தமிழ்]
9-00 செய்திகள் [ஆங்கிலம்]
9-20 வெபெஸ்டர் நிகழ்ச்சி.
9-50 ஏ தி. ரீம் நிகழ்ச்சி.
10·40 ஒளிபரப்பு முடிவு.

# இராணுவத்திலிருந்து வெளியேறிய சீக்கிய வீரர்களுக்கு மன்னிப்பு

(புதுடில்லி)

கடந்த வருடம் ஜூன்மாதம் அமிர்தசரஸ் பொற்கோயிலில் இந்திய இராணுவம் நுழைந்ததன் காரணமாக இராணுவத்தைவிட்டு வெளியேறிய சீக்கிய இராணுவ வீரர்களுக்கு இந்திய அரசாங்கம் மன்னிப்பு அளித்துள்ளது.

இதுதொடர்பாக இந்திய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொற்கோயிலில் இராணுவம் நுழைந்ததன் காரணமாக இந்திய இராணுவத்திலிருந்து 2732 சீக்கிய வீரர் வெளியேறினார்கள். இதில் 67 பேர் ஏனைய வீரர்களினால் கொல்லப்பட்டனர் 30 பேரைக் காணவில்லை. 2606 பேர் குற்றவாளிகளாக காணப்பட்டனர். இவர்களில் 1478 பேருக்கு தண்டனை வழங்கப்பட்டது.

தண்டனை வழங்கப்பட்ட 1478 பேரில் 900 பேரை இந்திய இராணுவம் தற்போது சேர்த்துக்கொண்டுள்ளது 230 பேர் அவர்களது தண்டனைக் காலம் முடிவடைந்ததும் விரைவில் இராணுவத்தில்சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் ஏனைய 341 பேரின் தண்டனைகளையும் அவர்களுக்கு மன்னிப்பு வழங்குவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

இந்திய இராணுவம் வழங்கியிருக்கும் இந்த பொதுமன்னிப்பு இந்திய இராணுவம் வெளியேறிய சீக்கிய வீரர்களை கடுமையாக நடத்துகிறது என்று நிலவிய கருத்துக்களை நீக்குவதாக அமைந்துள்ளது என்று பாதுகாப்புஅமைச்சகம் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

தண்டனைபெற்ற சீக்கிய வீரர்களில் பலர் தற்போது இராணுவ சீர்திருத்தப்பள்ளிகளில் சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது

## உலகச் செய்திகள்

# திருமலைச் சம்பவம்

(சென்னை)

திருகோணமலையிலுள்ளசாம்பல்தீவு, அறங்காட்டி ஆகிய இரு கிராமங்களில் இராணுவத்தினர் 200 க்கு மேற்பட்ட தமிழர்களைக் கொன்றுள்ளனர் என்று ஈழ தேசிய விடுதலை முன்னணியும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் குற்றம் சாட்டியுள்ளன

இந்த இரு கிராமங்களிலும் உட்புகுந்த இராணுவத்தினர் வீடுகளில் இருந்து தமிழ் மக்களை இழுத்து சுட்டுக்கொன்றனர் என்று இவர்கள் தெரிவித்துள்ளர்.

## மொழியியல் வல்லுநர் காலமானர்

[புதுடில்லி]

இந்தியாவின்பிரபல மொழியியல் வல்லுநர் டாக்டர் சுதேஸ்வரசர்மா தமது 98வது வயதில் நேற்று முன்தினம் புதுடில்லியில் காலமானர்

பத்மபூஷண் விருது பெற்ற இவர் தமிழ், உருது, சமஸ்கிருதம், கிரேக்கம், லத்தீன் மற்றும் பல ஐரோப்பிய மொழிகளில் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டவர் என்பது குறிப்பிடத் தக்கது.

## திம்பு பேச்சுவார்த்தை

# இறுதிக்கட்ட முயற்சிகள் தீவிரமாக நடக்கிறது!

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக 'திம்பு' வில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் முறிந்து போகாத வண்ணம் பாதுகாத்துக்கொள்வதற்கு இந்திய அரசாங்கம் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது

இதற்காக நேற்று பூட்டான் தலைநகர் 'திம்பு' வல இருந்து புதுடில்லிதிரும்பவேண்டியஇந்திய வெளிபுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி தமது பயணத்தை ஒத்திவைத்து இருதரப்பினரையும் சமாதானபபடுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளார் எனக் கூறப்படுகிறது.

வவுனியாவில் இராணுவத்தினர் பல அப்பாவி தமிழ் மக்களை கொலை செய்தமையைத் தொடர்ந்து திம்பு பேச்சுக்களில் இருந்து தமிழர் பிரதிநிதிகள் வெளி நடப்பு செய்தமையினால் பேச்சு வார்த்தைகள் முறியும் அபாயம் தோன்றியுள்ளது இதனைத் தடுக்கும் முகமாகவே இந்திய அரசு சமாதான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இதேவேளை இலங்கையில் இடம் பெறும் சம்பவங்கள் முக்கியமாக அரசும், தமிழ் விடுதலை இயக்கங்களும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறிவருவது குறித்து இந்திய அரசாங்கம் பெரும் கவலை கொண்டுள்ளது.

## எம். ஜி. ஆர். பாராட்டு

(வாஷிங்டன்)

அசாம் பிரச்னைக்கு தீர்வு காணப்பட்டது குறித்து அமெரிக்காவில் இருக்கும் தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம் ஜி ராமச்சந்திரன் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தீர்வு ஒன்று காணப்பட்டமை குறித்து அவர் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்குப் பாராட்டுச் செய்தி ஒன்றை வாஷிங்டனிலிருந்து அனுப்பி வைத்துள்ளார்

## இலங்கை நிலைமை:

# ராஜீவுக்கு கருணாநிதி தந்திமூலம் கோரிக்கை

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் மீது இராணுவத்தினர் பலத்த தாக்குதலை மேற்கொண்டு வருவதினால் அவர்களைப் பாதுகாக்க, தற்போது திம்புவில் இருக்கும் தமிழர் பிரதிநிதிகள் உடனடியாக அங்கிருந்து திரும்புதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று தி மு க. தலைவர் திரு மு. கருணாநிதி இந்தியப்பிரதமர் திரு ராஜீவ் காந்திக்கு தந்தி ஒன்றை அனுப்பியுள்ளார்

இலங்கையில் இராணுவத்தினர் 100க்கு மேற்பட்ட தமிழர்களை கொன்று விட்டதாகவும் தொடர்ந்து அவர்கள்மீது தாக்குதல் நடத்திவருவதாகவும் அவர் அத்தந்தியில் குறிப்பிட்டுளளார்.

# வவனியா ஆஸ்பத்திரியில் இராணுவம் சோதனை

[யாழ்ப்பாணம்]

வவனியா ஆஸ்பத்திரியை நேற்று முன்தினம் சுற்றிவளைத்த இராணுவத்தினர், வைத்திய அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி. மற்றும் டாக்டர்கள் தங்கும் விடுதிகளை சோதனையிட்டனர்.

விடுதி வீடுகளுக்குள்ளிருந்தவர்களின் அடையாள அட்டைகளைப் பார்வையிட்டு விசாரித்ததுடன் அறைகளையும் சல்லடைபோட்டு சோதனை நடாத்தினார்களாம்.

இதனைத் தொடர்ந்து ஆஸ்பத்திரி வட்டாரத்திலுள்ள ஊழியர்கள் மத்தியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. (மா)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் காட்டுவைரவர் கோவிலில் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் வியாழக்கிழமை 22ம் திகதி சிறப்பாக நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

இன்று காலை மகா கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகும். தொடர்ந்து நாளை மறுதினம்வரை காலையும் மாலையும் கிரியைகள் நடைபெற்று வியாழக்கிழமை காலை ஏழுமணியளவில் மகா கும்பாபிஷேகம் இடம்பெறும். இதனைத் தொடர்ந்து மகாபிஷேகமும் திருவுலாவும் நடைபெறும்.

## விபத்தில் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடந்த மோட்டார்சைக்கிள் விபத்தொன்றில் இளைஞர் ஒருவர் நேற்று பலியானர். (ஈ)

## லெபனனில் கார் குண்டு வெடிப்பு:

# 60 பேர் பலி! 170 பேர் காயம்!!

பெய்ரூட், ஆகஸ்ட். 18

லெபனனில் கிறிஸ்தவர்கள் வாழும் கிழக்கு பெய்ரூட் பகுதியில் இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் 60 பேர் பலியாகியுள்ளனர். 170 பேர் படுகாயமடைந்துள்ளார்.

லெபனனில் கிறிஸ்தவர்கள் அதிகமாக வாழும் கிழக்கு பெய்ரூட்டில் சனநெருக்கடி மிகுந்த 'சுப்பர்' மார்க்கட்டுக்கு அருகே ஐந்துமாடிக் கட்டடத்தில் இந்தக் கார்க்குண்டு வெடிப்பு இடம்பெற்றது

காரில் வைக்கப்பட்டிருந்த 200 கிலோ இரும் குண்டு காருடன் வெடித்ததில் இந்த ஐந்து மாடிக் கட்டிடம் பலத்த சேதத்திக்குள்ளானது.

லெபனனில் இத்தகையகார் குண்டு வெடிப்புக்களே அதிகமாக இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

### மணிவாக்கு

நம் அரசாங்க அமைப்பின் அடிப்படையை மாற்றி அமைக்கும் உரிமை நம் மக்களுக்கு உண்டு: இந்த அடிப்படையிலேயே நம் அரசியலமைப்பு அமைந்துள்ளது.

—வாஷிங்டன்

# நமது நோக்கு

## சமாதான பேய்த்தேர்

வவனியாவில் இரத்த மழை சோனாவாரியாகப் பெய்ய திம்புவில் குடை பிடிப்பதில் அர்த்தமுண்டா?

கடந்தவாரம் நடந்து வந்த இரத்தக்களரி திருகோணமலையிலும், வவனியாவிலும் வகுத்துவந்த மக்களை நாடுகடத்தினது ஒரு புறம்; பலர் ஆண், பெண், குழந்தைகள் இரத்தவெள்ளத்தில் இறந்து கிடக்கும் கோரக்காட்சி வவனியாவில் கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் இடம் பெற்றிருக்கிறது; இதற்கு பொறுப்பு யார் என்றும், தமிழ் அப்பாவிமக்கள் மட்டும்தானா கொல்லப்படுகிறார்கள் என்றும் எதிர்வாதம் பேசலாம்.

கொழும்பு அரசுசார்பு பத்திரிகைகள் தமிழ்மக்கள் சார்பில் எவ்வித அனுதாபமும் காட்டிவந்ததில்லை. வருடக்கணக்கில் இவ்விதம் எழுதிவருவதால் பலர் நிலைமையைத் திரித்துக்கூற இப்பச்சைப் பொய்யான பிரசாரம் நாட்டின் படித்த மக்கள் வட்டாரங்களில் உறுதிகொள்கின்றது.

தமிழ் இளைஞர் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவரென்ற கருத்து பல வருடங்களாக நிராகரிக்கப் பட்டதுமன்றி அவர்கள் என்றும் பயங்கரவாதிகளே என்ற நம்பிக்கையில் அப்பதம் திம்பு பேச்சு வார்த்தைகளிலும் தொடர்கின்றது

பயங்கரவாதிகளுடன் அரசாங்கம்பேச்சுவார்த்தை நடத்துவதே அடிப்படை முரண்பாடு. கெரில்லாத் தலைவர்கள் என்பது வித்தியாசமானது. நாட்டின்ஆட்சியுடன் போராடும் எதிர்ப்படை என்று சமாதானம் சொல்லலாம். 'பயங்கரவாதிகள்' என்ற பதம் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு எள்ளளவும்உதவாது என்பதுதெளிவானுல் பேச்சுவார்த்தைகளின் சூழ்நிலை கணிசமான மாற்றமடையும்.

அடுத்தபடியாக பேச்சுகள் அங்கு நடைபெற இங்கு யுத்தப்பிரசாரம் நடைபெறுவதும், 'பயங்கரவாதி'களின் துடுக்கை அடக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்ற ஆசைவார்த்தையும் இங்கு வாழும் பீதியடைந்த சிங்களமக்களை திசைதிருப்பும் அரசியல் ஞானமற்ற அபாயச்செயல்கள்.

தமிழ்இளைஞர் -போராளிகள் பேச்சுவார்த்தைகளுக்கும் சமாதானராஜதந்திரங்களுக்கும் பழக்கப்பட்டவர்களல்லர்; எனவே தங்கள் தங்கள் குழுவினருக்குரித்தான கருத்துக்களை சட்டநிலைவழுவாத முறையில் தெளிவு படுத்த நாடுகண்ட பிரபல வழக்கறிஞர் சத்தியேந்திராவையும் தங்கள் நோக்கத்தில் அபிமானமும் அனுதாபமும் காட்டும் மற்றைய பிரமுகர்களையும் ஒழுங்கு செய்துள்ளனர்;

இருதரப்புகளுக்கும் உடனடி ஒற்றுமை ஏற்படுமென்று எவரும் கனா காணவில்லை; ஆனால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அபாயம், அவர்களின் பாதுகாப்பின்மை அவர்களுக்கு இதுவரையும் உண்டான உயிர், உடமை, நட்டம்- இவை யாவும் நொந்த பகுதியினர் தமிழர்களே என்பதை நிரூபிக்கின்றன. அவர்களுக்கே நியாயம் முன் உரிமை என்ற மனப்போக்கில் பேச்சுக்கள் அங்கு தொடர வேண்டும்.

'பயங்கரவாதிகள்'- யார் எந்த இயக்கம் என்பதெல்லாம் மர்மமாக விருக்கும் போது - கண்ணிவெடி வைப்பதுவ, பொலிஸார் ராணுவம் கொல்லப்படுவதும் இந்நாட்டில் பழம் பாடமாய் விட்டது. அதில் ஆச்சரியமில்லை யார் போர் நிறுத்த உடன்படிக்கையை மீறினாலும் விளைவு இவ்விரு பகுதியினரை பாதிக்கும் என்பது தெளிவு.

எமது மக்கள் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் அழிக்கப்படுவதும் வீடுகளில் இருக்கும் பெண்கள், குழந்தைகள் சுடப்படுவதும் வீடுகள் கொளுத்தப்படுவதும் தொடருமானுல் அரசாங்கம் எத்தகைய தீர்வை, எவ்விதத்தில் இந்த விடயத்தில் வெற்றி காண முயல்கிறதென்பதை யூகிப்பது கடினமல்ல.

ஒட்டுமொத்தத்தில், வருடக் கணக்கில் இழுபறிப்படும் இந்தக் கொடும் போர் தமிழ் மக்களை அழித்து ஒழிக்கும் அடக்குமுறையை நிரந்தரமாக்கி விட்டது.

அரசாங்கத்தின் இந்த உத்தியை ஆதரிக்கும் தமிழ் மக்கள் - பெரும்பான்மை மிதவாதிகள் எவரும் இந்நாட்டிலிருப்பதாக நாம் அறியவில்லை.

தமிழ் மிதவாதிகள் போர் என்ற பேரச்சம் காரணமாக அரசை ஆதரிப்பாரென்று நம்புவது மடமை. இளைஞர் இயக்கங்களில் நம்பிக்கையிழந்து அரசை நம்புவது, அரசனை நம்பி புருஷனை இழந்த கதைக்கு ஒப்பாகும்.

ராணுவதீர்வில் நம்பிக்கை கொண்டு சமாதானப் பேச் சென்ற பாசாங்கு,நடத்தும் எந்தப் பக்கமும்சமாதானப் பேய்த்தேரையே காண்கின்றது.

### ஆலோசனைச் சபை

(யாழ்ப்பாணம்)

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் தேர்ச் சபை ஆலோசனைசாபைக் கூட்டம் வ. சண்முகராசா தலைமையில் சமீபத்தில் நடைபெற்றது. அம்மன் தேர் திருத்தல், பிள்ளையாருக்கும் முருகனுக்கும் புதிய தேர் அமைத்தல் முதலிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (ப)

★ உலக அரசியல் அரங்கு — அரசியல் அவதானி

# பாரதத்தின் சுதந்திரதின பரிசுகள்

புதுடில்லி

பஞ்சாப் உடன்படிக்கையும் ஆறுவருடம் இந்தியாவை உலுக்கி வந்த அஸாம் பிரச்சினையின் தீர்வும் 38 - வது இந்தியசுதந்திர தினப்பரிசுகள். உச்சி நின்று உள்ளங்காலவரையும் பலத்த பாதுகாப்போடு நின்று டில்லி செங்கோட்டை கொத்தளத்தில் உரையாற்றிய இந்தியப் பிரதமருக்கு, சுதந்திரதினக் கொண்டாட்டம் மும்மூர்த்திகளின் - மகாத்மா, ஜவஹர்லால், இந்திரா - தரிசனத்துடன் ஆரம்பித்தது சுதந்திர இந்தியாவின் சிற்பிகளும் அதனை இன்றைய நிலைக்கு உயர்த்தி வைத்த உலகத் தலைவர்களும் இவர்களே பாரதப் பிரதமர் ராஜீவ் இவர்கள் காட்டிய வழியில் தொடர்ந்து நவ இந்தியாவை 21-ம் நூற்றுண்டுக்கேற்ற முறையில் கட்டிஎழுப்ப இவர்களின் ஆசிநிறைய உண்டு.

இந்த இரு வெற்றிகளுமே இந்தியப்பிரதமர் மிகுந்த பாதுகாப்புடன் நடமாட வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பஞ்சாப்பில் கடும் தீவிரவாதிகள் வளத்தில் வரக்காளம் எடுக்கும். அஸாமில் குண்டுகள் வெடித்துக் கொண்டிருக்கையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை அம்றிற் சாரில் நடந்த வெற்றிக் கொண்டாட்டத்தில் என்றுமில்லாத பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

இருமாநிலங்களிலும் பொதுவாக உடன்பாடு பாராட்டப்பட்டு ஆதரிக்கப்படுகிறது: மக்கள் அமைதியையே விரும்புகின்றனர். ஜனவரி 1966-ல் தொடக்கம் வெளியூர்களிலிருந்து அஸாமுக்கு வந்தவர்கள் கண்டு பிடிக்கப்படுவார்கள். வாக்குரிமை இழப்பார்கள் என்ற முடிவு பலரைப்பாதிக்கும் எனவே கடுமையான எதிர்ப்பு இருப்பது சகஜம். ஆனால் ஆறுவருடம் போராடி வரும் அஸாம்இளைஞர் ஒன்றியம் இந்தத்தீர்வை ஏற்பதால், எதிர்ப்பு பிசுபிசுக்கும்.

மூன்று வருடம் அரசியல் சுயநிர்ணயம் கோரி சீக்கியர் நடத்திய போராட்டம் முடிவடைந்தும் இராவிராவாக அஸாம் பேச்சுக்கள் நடைபெற்ற நள்ளிரவுகழிய உதயத்துக்கு முன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட ராஜீவ் மிகக்களைத்த முகத்துடன் தொலைக்காட்சியில் காணப்பட்டதும் இந்திய முற்றிய பிரச்சினைகளுக்கு முடிவுகாண்பதில் உலக சாம்பியன் என்ற கௌரவத்துக்குரியதெனலாம்.

## புதிய உலகபில்லியட் சாம்பியன் சேதி

### பில்லியட் உலக சாம்பியன்

பில்லியட்ஸில் உலகசாதனைக் கிரீடத்தைப் பெற்றிருந்த பாரதம் இன்று அதனைப் பாதுகாக்க, உலக வரலாற்றில் இளையவரும் விளையாட்டில் புதுவித திறமையுடையவருமான கீட்சேதி வெற்றி வீரராகத்திகழ்கிறார். அவருடைய விளையாட்டு பார்வையாளரை என்றுமில்லாத அளவு கவர்ந்திருப்பது உலகப் பிரசித்தமாகிவிட்டது. இத்தகைய வீரர்களுக்கு ஸ்தாபன ரீதியாக தக்க பயிற்சியும் உற்சாகமும் அளிக்க வேண்டுமென்று விளையாட்டு நிபுணர்கள் கருதுகின்றனர்.

## காப்டன் கபில்தேவுடன் இலங்கை வரும் இந்திய கிரிக்கெட் வீரர்கள்


அணுசக்தி அபிவிருத்திக்கு இந்தியா உதவ வேண்டுமென்று கேட்டிருக்கும் இலங்கை இந்தியப்பிரதமரின் சமாதான வெற்றிகளின் ரகசியத்தை அறிந்து இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமென்று திரு. ராஜீவ் காந்தியே கேட்டிருக்கிறார்.

### திம்புவும் கொழும்பும்

திம்புவில் பேச்சுகள் முறிந்திருப்பதும் வடஇலங்கையில் மயானகாண்டம் மிகத்துரிதமாக முன்னேறுவதும் ஒரு புறம். இதற்கு மாறாக இலங்கை வரும் இந்தியாவின் உலகப்புகழ் பெற்ற காப்டன் கபிலதேவும் அவருடைய கிரிக்கட் கோஷ்டியினரும், அவுஸ்திரேலியாவின் மெல்போர்னில் தங்கள் திறமையைக்காட்டி உலகை மெச்ச வைத்த இந்திய டெஸ்ற் வீரர்கள் இன்று இங்கிலாந்தின் சுற்றுப்பிரயாணத்தில் பல போட்டிகளில் கலந்து வெற்றிவாகையீட்டியுள்ளனர். காப்டன் கபிலதேவின் அதிசய ஆற்றலும் அவருடைய இனிமையான சுபாவமும் ஆங்கில வீரர்களினதும் ரசிகர்களினதும் பாராட்டை பெற்றிருக்கிறது அவருக்கும் அவருடைய கோஷ்டிக்கும் பல இடங்களிலிருந்து அழைப்பு வந்த போதும்; தாய்நாட்டின் பணிப்பின்படி இலங்கையில் தங்கள் கைவண்ணத்தைக் காட்ட வேண்டுமென்ற அழைப்பை ஏற்று வருபவர்களென எதிர்பார்க்கப்படுகிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

## புதுப் பொலிவு பெற்ற கடையிற்சுவாமி சிவாலயம்



(கடையிற் சுவாமி சிவாலயத்தில் சிறப்பாகஇப்பொழுது நடைபெறும் உற்சவத்தை முன்னிட்டு இக்கட்டுரை வெளிவருகிறது).

ஈழநாடு திருக்கோணேச்சரம்' திருக்கேதீச்சரம் போன்ற பாடல் பெற்ற தலங்களைக் கொண்ட பெருமைமிக்கது. அதேபோல ஒப்பற்ற யோகியரையும், துறவியரையும் சித்தரையும் முனிவரையும் கொண்டது ஈழநாட்டிற்கென்றே ஒரு சித்தர் பரம்பரை இருந்ததென்றாலும் அது மிகையாகாது. அந்தப்பரம்பரையைத் தெந்தெடுத்து வரலாற்று ஆதாரங்களுடன் தருவது அறிஞர் க. சி. குலரத்தினம் எழுதிய கடையிற் சுவாமிகள் சமாதிக்கோயில் கும்பாபிஷேக மலர் என்னும் நூல். இதனை வெளியிட்டவர் சிவநெறிப் புரவலர் திரு. க. கனகராசா அவர்கள்.

கடையிற் சுவாமிகளின் வரலாற்றைக் கூற ஆரம்பித்த இந்நூல் அத்துடன் அமையாது யோகசுவாமிகள்,' செல்லப்பா சுவாமிகள், முத்தியானந்த சுவாமிகள், நிரஞ்சனானந்த சுவாமிகள், சின்மயகனந்த சுவாமிகள் எனச் சுவாமிகள் பலரை-சித்தர்பரம்பரையைக் கூறுகிறது.

"கடையிற் சுவாமிகளின் தரிசனத்தால், திருநோக்கால், பரிசத்தால். ஏச்சினால், பேச்சினால் உபதேசத்தால் தீட்சையால் நற்கதி அடைந்தவர். திலேயே அருந்த பெரும் மதிப்புக் கூறப்பட்டுள்ளது.

### செல்லப்ப சுவாமிகளின் குரு

யோகசுவாமிகள் தம்மை ஆரடா என்று அதட்டி ஆட்கொண்டருழியவர் செல்லப்பன் என்னும் திருவுடையான் என்று என்பு உருகும்வகையில் என்னை எனக்கறிவித்தான்

### சரவணமுத்து விஜயன்

தொகை சொல்லில் அடங்காது. சுவாமிகள் நடந்து சென்ற இடத்துத் தெருப் புழுதியை வாரித் தங்கள் உடம்பிற் பூசிக்கொண்டவரும் அவர் சுருட்டுப் பற்றும்போது துப்பும் எச்சில் தங்கள்மேற் படுமாறு நின்று பயனடைந்தவரும் பலராவர்." என்ற பகுதியினால் கடையிற் சுவாமிகளுக்கு அவர் வாழ்ந்த காலத்

எங்கள் குருநாதன் என்று பாடியருளியுள்ளார்: செல்லப்பசுவாமிகள் உபதேசித்தருளிய நான்கு திருமந்திரங்களே யோகசுவாமிகளின் மகாமந்திரங்களாயின: அவை ஒரு பொல்லாப்புமில்லை. எப்பவோ முடிந்தகாரியம். நாமறியோம். முழு

(5-ம் பக்கம் பார்க்க)

# இப்படியும் நடக்கிறது

இலங்கை இனப்பிரச்னைக்கும் பூட்டானுக்குமுள்ள தொடர்பு என்ன?

ஒரு வெளிநாட்டுப் பத்திரிகையாளர் இரண்டு விளக்கம் கொடுத்தார்:

''இமயம் முதல் குமரிவரை என்று தமிழன் பெருமை பாடிய காரணத்தினால் இமயமலை அடிவாரம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது...

''யுத்தத்தின் பின்னர் பங்களாதேஷ் 'பிரசவம்' பெற்ற போது, முதன் முதலில் பூட்டான்தான் பங்களாதேஷை அங்கீகரித்தது...''

எனக்குப் புரிகிறது. உங்களுக்கு எப்படி?

★ ★

வெறும் மண்ணை, அதுவும் பணலைக் கொண்டு கயிறு திரிக்கத் தெரியுமா?

வவனியா சம்பவம் பற்றி அந்த 'புவத்' வெளியிட்ட செய்தி ... அதன் செய்தித்துறைக்கே சிகரம் வைத்த மாதிரி அமைந்து விட்டதாக இங்கு பேசிக்கொள்கிறார்கள்!

சும்மா சொல்லக்கூடாது ... பெரும் சர்வதேச செய்தி ஸ்தாபனங்கள் எல்லாம் 'புவத்' திடம் 'பிச்சை' வாங்க வேண்டும்!

''ஊடுருவி''




உடனே கறந்த பசுப்பாலின் ருசி!

பால் வெண்ணை கூடுதலாக உள்ளது!

இணையற்ற சக்தி மிக்க பால்!

## பாரதத்தின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திம்புவில் தற்சமயம் நடைபெறுவது கிரிக்கட் அல்ல என்றால், கொழும்பில் நடக்கவிருக்கும் ஒறிஜினல் கிரிக்கட் இந்தியாவின் மத்தியஸ்தத்துக்கு பலமளிக்குமா?

## புதுப்பொலிவு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

துண்மை என்பன, செல்லப்பா சுவாமிகள் யோக சுவாமிக்குக் குரு. கடையிற்சுவாமிகள் செல்லப்பா சுவாமிகளுக்குக் குரு

### சுவாமிகளின் தோற்றம்

நூலாசிரியர் குமாரத்தினம் கடையிற் சுவாமிகளின் உள்ளொளியை மட்டும் அன்றிப் புறத்தோற்றத்தையும் சிறப்புற வர்ணித்துள்ளார். சுவாமிகளின் தோற்றம் பற்றிக் குறிப்பிடும்போது ''பொன் வண்ணம் எவ்வண்ணம் அவ் வண்ணம் பொலிந்த அழகுத் திருமேனி. ஆறரை அடிக்கு மேற்பட்ட அழகுத் திருமேனியில் அசையும் திருக்கரங்கள் அருளொழுகும் கண்கள். சடையும் பரட்டையுமான தலை, தோளிலே கருநிறச் சால்வை. கக்கத்திலே நரைத்த குடை. அரையிலே உயர்த்திக் கட்டிய வேட்டி, மெதுவான நடை, மழலை மொழி, கண்டவரை வசீகரிக்கும் திருக்கோலம். சுருட்டுப் புகைத்தாலும் புகையின் மணமில்லாத திருவாய் என்று கூறியுள்ளார்.

### அற்புதங்கள்

கடையிற் சுவாமிகள் அற்புதங்கள் பலவற்றை நூலாசிரியர் இந்நூலிற் குறிப்பிட்டுள்ளார். சுவாமிகளின் பெருமை தெரியாத பொலிஸார் அவரைப் பிடித்து ஓர் அறையிற் பூட்டி வைத்த போது பூட்டு அப்படியே இருக்கச் சுவாமிகள் பொலிஸார் அறியாவண்ணம் வெளியேறினார்கள்.

ஒருமுறை வள்ளம் ஓட்டுபவர் சுவாமிகளைத் தரிசிக்க மண்டைதீவு சென்றார் வெய்யிற் கொடுமையால் வள்ளம் ஓட்டியின் கால்கள் மணலில் நடக்கமுடியாமல் துன்புற்றன. மண்டைதீவில் இருந்த கடையிற் சுவாமிகள் பக்கத்திலிருந்தவரைத் தமது கால்களுக்குக் குடைபிடிக்குமாறு பணித்தார் அவர் அவ்வாறே சுவாமிகளின் கால்களுக்குக் குடைபிடிக்க வள்ளம் ஓட்டியின் கால்கள் குளிர்ந்தன?

இவ்விதமாகப் பெருமை பெற்றவர் கடையிற் சுவாமிகள்;

### 40 ஆண்டுகளுக்கு முன்னர் ..

இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் கும்பாபிஷேகம் நடைபெற்ற கடையிற் சுவாமி சமாதிச் சிவாலயம் அடியார்களின், குறிப்பாக இளைஞர்களின் பெருமுயற்சியினால் புதுப்பிக்கப்பட்டு கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 29ம் திகதி மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டு, தொடர்ந்து நாற்பத்தெட்டு நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடந்தது

கடந்த பதினொராம் திகதி முதல் இன்றுவரை அபிஷேகமும் பூஜையும், இலட்சார்ச்சனையின் அங்கமாக டஞ்சமுகார்ச்சனை நடைபெறுகிறது. நாளை கும்பாபிஷேகம் நடைபெற்ற மாலையில் ஸ்ரீவாலாம்பிகா தேவி சமேத வைத்தீஸ்வரப் பெருமான் வீதிஉலா வருவார்கள். நாளை மறுதினம வைரவப் பெருமானுக்கு விசேட அபிஷேக பூஜையும் அன்னதானமும் நடைபெறும்.

இன்றைய சிறப்பு நிகழ்ச்சியாக, திருமதி வசந்தா வைத்தியநாதன் 'பக்திநிலை' பற்றி சிறப்புரை ஆற்றுவார்.

## சமாதானம் தவிர்க்கமுடியாத முடிவு?

### லெபனான்

பேருந்றில் பலவிதப்பட்ட பயங்கர ஆயுதங்களைக்கொண்டு கடுஞ்சமர் புரியும் கிறிஸ்தவ படைகளுக்கும், முஸ்லிம் துப்பாக்கி வீரருக்கும் எத்தனையோ போர் நிறுத்தங்கள் ஆரம்பமாகி, இடையில் முறிவு கண்டன. இருப்பினும் லெபனானில் சமாதானம் மராது விடமுடியாதென்ற நம்பிக்கை இன்னும் இருந்துவருகிறது.

இலங்கையில் நடந்த வவனியாப் படுகொலைகளைக் கணிப்பிட்டால் இதுவும் ஒரு லெபனானாகிவிட்டதெனலாம் ஆனால் இங்கும் ஒரு சமாதானத்தை நிலைநாட்ட முடியாத நிலைமையை இன்றைய கொடுமைகள் உணர்த்துகின்றன. மக்கள் சமாதானத்தைவிட உயிர் வாழ்வது அரிதினும் அரிதென முடிவுகட்டிவிட்டனர்

லெபனானின் அரசியல் தீர்வுக்கு சிரியா முக்கிய பங்கு கொள்ளுமென்பது தெட்டத் தெளிவு. ஆனால் லெபனான் விவகாரங்களில் மீண்டும் பலஸ்தீனியப் பிரச்னை கலந்துவிட்டதால் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. பி. எல். ஓ இரண்டாகப் பிரிந்ததும், தலைவர் அரபாத்துக்கு ஆதரவான கட்சியின் 4 பேர் அண்மையில் கொலைப்பட்டதால் லெபனானில் பலஸ்தீனியரின் உட்பகை பெரிய பதற்றத்தை உண்டாக்கிவருகிறது. இந்த அமைப்பில் (பி. எல். ஓ.) போட்டி நிலவி வருவது லெபனானின் அமைதிக்கு உதவாது. இத்துடன் இஸ்ரேல் அடிக்கடி லெபனானைத் தாக்கும் நடவடிக்கையும், வட லெபனானில் இன்னும் இஸ்ரேல் படைகள் காணப்படுவதும் லெபனானின் சீர்கெட்ட நிலைக்கு தூபமிடுகிறது. இருப்பினும் ரீகனின் 'பேருட்பகிஷ்காரம்' இன்றைய கெமாயில் ஆட்சிக்குப்பதிலாக இன்னொரு ஆட்சி அமைப்பதற்கு உதவும்.

மத்து வருடம் இந்த நாடு கண்டபோரும் பொருளாதார சமுதாயக்கேடும் ஒரு முடிவடையும் பக்குவத்தை நாடி நிற்கிறது?

### மேற்கு ஜெர்மனி

மேற்கு ஐரோப்பாவின் இன்றைய கவலை மேற்கு ஜெர்மன் அரசில் பிரதிபலிக்கிறது. அதென்ன? மேற்கு ஐரோப்பிய நாடுகளைப் பீடித்திருக்கும் இரு பிரச்னைகள், அணு ஆயுதக் கட்டுப்பாடு, தங்கள் பொருளாதாரத்தைத் தாக்கும் அமெரிக்க பட்ஜெட்டின் துண்டுவிழும் தொகை. இவ்விரண்டையும் சீர்படுத்த இவ்வருடத்தில் ஜனாதிபதி ரீகனின் இன்றைய உடல்நிலை உதவாதென்பதே நாம் மேலே குறிப்பிட்ட கவலை.

சென்ற மாதம் வாஷிங்டனில் நடந்த கன்சவேட்டிவ் உலகத் தலைவர்களின் மாநாட்டில் ஜனாதிபதி ரீகன் பங்குபற்றாததால் இதன் நிலைமைபற்றி எதுவும் அறிய முடியவில்லை. ரீகன் ஒரு நோயாளி என்ற அச்சத்தை பரவவிடாததே ரீகன் வராமைக்குக் காரணம். இந்த அச்சத்தை நீக்க பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தாட்சர் ஜனாதிபதி ரீகனை வரவழைத்திருக்கவேண்டுமென்று மேற்கு ஜெர்மன் அதிகாரிகள் கருதுகின்றனர்.

வருகிறநவம்பரில் ரீகன் ரஷ்யத்தலைவர் கொபச்சேவை சந்திக்கவேண்டிய ஆயத்தங்களைச் செய்வது ஒன்றுதான் ரீகனுக்கு செய்யக்கூடிய கடமை.

### தென் ஆபிரிக்கா

மக்கள் எதிர்ப்பு வலுப்பெற அவசரகால ஆட்சியின் அட்டூழியங்கள் இன்னும் அதிகரிக்கின்றது. அமெரிக்காவின் ஆதரவு ஆதரிக்க மக்கள் இயக்கத்துக்கு சார்பாக இல்லாவிட்டாலும் அமெரிக்க காங்கிரஸ் வலியுறுத்தும் பொருளாதாரத் தடையை ரீகன் அனுமதித்தால், பிறற்றோரியா தனது கொடுமைகளைக் குறைத்துக் கொள்ளுமென்று ஐரோப்பா நினைக்கிறது. கறுப்பர் தலைவர்களோடு பேச்சுவார்த்தை நடத்த தலைவர் போதா முன் வந்தபோதும், இயக்கங்களின் வன்செயல்கள் நிறுத்தப்பட வேண்டுமென்ற முன் நிபந்தனை விடுத்திருக்கிறார். இக்கொடிய ஆட்சியை ஆதரிக்கும் தீவிரவாத வெள்ளையரும் தங்கள் பாடு என்னுமோ என்றும் தலைவர் போதாவன் பிடிவாதம் தோல்வியில் முடியுமோ என்றும் அஞ்சுகின்றனர்.

### உகண்டா

உகண்டாவில் நடைபெறும் புதிய ராணுவ ஆட்சியில் பல கொடிய சம்பவங்கள்; கொள்ளை, கொலை, உணவுத் தட்டுப்பாடு, போக்குவரத்து நெருக்கடி போன்றவை அதிகரித்துவருகிறது. அராஜகம் தாண்டவமாடுகிறது. இது இந்நாட்டின் வழக்கமான நிகழ்ச்சி கடந்த 15 வருடங்களில் நடந்த இரண்டாவது சதிப்புரட்சி மட்டுமல்ல, காலத்துக்குக் காலம் மக்களை அடக்கு முறைக்கும் ராணுவ போட்டி ஆட்சிக்கும் பழக்கப் பட்டனர். பொதுமக்கள் இம் மாற்றங்களில் நன்மை கட்டுமோ என்று நம்பி ஏமாந்து போகின்றனர்.

### ஜப்பான்

40 வருடங்களுக்குமுன் அமெரிக்காவின் ராணுவ பலத்தால் தோல்விகண்ட ஜப்பான் மிக விரைவில் மீண்டும் உலகில் ஒரு குபேர நாடாக வளர்ந்திருக்கிறது. இருப்பினும் இன்றைய ஜப்பானிய இளைஞரா மகிழ்ச்சியற்ற பிறவிகளாகக் காணப்படுகின்றனர். அமைதியற்ற சூழ்நிலையில், செல்வத்தால் எந்தவித இன்பமும் காணாது. ஆக்க பூர்வமான கலையற்ற, அமெரிக்க நாகரிகத்தால் நாடு நாசமாகிறதென்ற கருத்தில் ஒரு இயக்கம் உருவாகிறது. பழைய ஜப்பானிய சக்கரவர்த்தி ஆட்சிமுறை இனி வரா விட்டாலும் ஜப்பானிய பண்பாடு ஒன்று உண்டு. அதனை மீட்பதே தமது பணியென்று இந்த இயக்கம் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறுகின்றது.

### சீனா

சீனாவில் உதயமான நவீனமயமாக்கும் திட்டம் சாதரண மக்கள் மத்தியில், மேனாட்டு நாகரிகத்தின் வெளிப் பூச்சில் ஒரு ஆவலை உண்டாக்கி வருகிறது. சாதாரண ஹோட்டல் உழைப்பாளிகள், பணிப் பெண்கள் அங்கு தங்கியிருக்கும் வெளிநாட்டு விருந்தினரின் உள்உடை, மேனி மினுக்கும் பல நுட்ப ஆடம்பரப் பொருட்களை களவாடுவது சாதாரணமாகிவிட்டது. பிரசாரத்தின் இயல்பான பொய்யைத் தவிர இன்றைய இளைஞர் கடந்தகால மாவோவின் சிந்தனைக்கும் நடைமுறைக்கும்மாறாக சொகுசான சீவியத்திலும், மேனாட்டு ஆடம்பரத்திலும் மோகம் கொள்வது குறிப்பிடத் தக்கது?

மேனாடுகள் லௌகீகம்; கிழக்கு நாடுகள் ஆன்மீகம் என்ற பண்டைய பாகுபாடு அர்த்தமற்றதென்பதை இன்று எவரும் ஆட்சேபிக்கார். குழப்பமும் கொந்தளிப்பும், அடக்குமுறையும் அராஜகமும் ராஜதந்திரமும் உலகெங்கும் காணப்படுகிறது.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### திருமதி நிர்மலா நடேசன்

### Mrs. Nirmala Nadesan

PROJECT OFFICER
NATIONAL DEVELOPMENT BANK
COLOMBO—1




தெல்லிப்பழை வறுத்தலைவிளானைச் சேர்ந்த தம்பிராசா நடேசன் (கொழும்பு தேசிய அபிவிருத்தி வங்கி திட்டமிடல் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், புங்குடுதீவு கிழக்கு நா. சி. நடராசா தம்பதியரின் மூதற் புதல்வியும் 21-07-85 அன்று கோர விபத்தில் மரணமானவருமாகிய திருமதி நிர்மலா நடேசன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 18-8-85 ஞாயிற்றுக்கிழமை கீரிமலைப் புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது.

வீட்டுக்கிரியைகள் 20-8-85 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு கிழக்கு நா. சி நடராசா தம்பதியரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வைபவத்தில் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,

| | |
|---|---|
| திரு. திருமதி | திரு. |
| நா. சி. நடராசா, | த. நடேசன், |
| புங்குடுதீவு-12; | வறுத்தலைவிளான், |
| (127) | தெல்லிப்பழை; |


## FASHIONABLE SUIT MAKERS



- Wedding Suits
- Foreign Suits
- Shervani Suits
- Saffari Suits

## DIPLO TAILOR

60 NEW WEST MARKET,
GRAND BAZAAR — JAFFNA.


## மரம் வீழ்ந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

மிருசுவிலைச் சேர்ந்த எஸ். வேலாயுதபிள்ளை [40] என்பவர் மீது மரமொன்று வீழ்ந்ததினால் அவர் மரணமானார். காயமடைந்த அவர் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு அங்கு மரணமானார். (ஊ)

## புதிய தலைவர் நியமனம்

[வேலணை]

வேலணை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு நா. பாலச்சந்திரன் இன்னமும் விடுதலை செய்யப்படாத காரணத்தினால் சங்கத்தின் புதிய தலைவராக கூட்டுறவுத் திணைக்களத்தின் கணக்காளர் பகுதியில் கடமையாற்றும் திரு எஸ். ஜெகநாதனை யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் தலைவராக நியமித்துள்ளார்.

## இருபதுபேர் கைது

(வவனியா)

வவனியா கண்டி வீதியில் கடந்த 10 ம் திகதி இரு கடைகளில் பட்டப்பகலில் கடையினை உடைத்து கொள்ளையடித்தவர்களில் இருபதுபேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இக் கொள்ளையில் ஈடுபட்டவர்கள் வவனியா பௌத்த விகாரையில் இருந்தவர்களே என நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்தன.

கொள்ளை அடிக்கப்பட்ட பொருள்களின் ஒரு பகுதியும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கொள்ளை அடிக்கப்பட்ட இரு கடையும் தமிழருக்கு சொந்தமானதாகும்.

## விஞ்ஞானம்கற்பித்தல்: முருகையன் நடத்திய ஆராய்ச்சி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நடத்திய பட்டமளிப்பு விழாவில் கவிஞர் முருகையனுக்கு எம். ஏ. பட்டம் வழங்கப்பட்டது விஞ்ஞானம் கற்பித்தல்பற்றி அவர் செய்த ஆராய்ச்சி உளர் மூலப்பொருட்களைக் கையாண்டு ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் சரிக்கட்டப்படும் உடனடி இணக்கல் உபகரணங்களின் பலிதத்தன்மையைச் சோதிப்பதாக உள்ளது இவ்வகை உபகரணங்கள் சிக்கனமானவை அதே வேளையில், கல்விப் பலனைப் பாதிக்காதவை இந்த உண்மையினை நடைமுறைப் பரிசோதனை மூலம் முருகையன் நிறுவியுள்ளார்

விஞ்ஞானத்திலும் கலையிலும் பட்டதாரியாகிய முருகையன் நாடறிந்த கவிஞரும் பேச்சாளரும் எழுத்தாளரும் ஆவர்

இவர் மூல்லைத்தீவுக் கல்விப் பணிப்பாளராகவும் யாழ்ப்பாண மேலதிக கல்விப் பணிப்பாளராகவும் முன்னர் பணியாற்றினார் இப்பொழுது வவனியாப் பிரதேசக் கல்விப் பணிப்பாளராக உள்ளார்

## யாழ். நகரில் 37 மினி சினிமா

(கல்வியங்காடு)

முப்பத்தேழு 'மினி' த்தியேட்டர்களில் இதுவரை ஏழு தியேட்டர்களே 'லைசென்ஸ்' பெற்றுள்ளன!

யாழ். மாநகரசபை எல்லையுள் 37 மினித் தியேட்டர்கள் இயங்குவதாகவும், அவற்றில் இதுவரை 7தியேட்டர்கள் மட்டுமே யாழ்.மாநகரசபையிடம் 'லைசென்ஸ்' பெற்றுள்ளதாகவும் மீதித்தியேட்டர்கள் உரிய முறையில் 'லைசென்ஸ்' பெறாமலே இயங்குவதாகவும் தெரிகிறது.

மினித் தியேட்டர் ஒன்று யாழ். மாநகரசபையிடம் லைசென்ஸ்பெற 250 ரூபா கட்டவேண்டும் கட்டுப் பணமாக வைப்பில் இருக்க 1000 ரூபா செலுத்தவேண்டும். ஒரு டிக்கட்டுக்கு 25 வீதம் வரி செலுத்தவேண்டும்.

லைசென்ஸ்பெற விண்ணப்பித்த மினி உரிமையாளர் சிலர் கட்டுப்பணம் செலுத்தத்தவறியுள்ளதால் 'லைசென்ஸ்' வழங்கப்படாமல் இருப்பதாகவும் தெரிகிறது.

பதினொரு மினித் தியேட்டர்கள் மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொருட்களின் பெறுமதி ஒன்றரை லட்சம்

(சுண்டுக்குளி)

யாழ் தேர்தல் அலுவலகத்தில் அண்மையில் நடந்த கொள்ளையில் ரோணியோ மெசின் ரோணியோ பேப்பர் பிளாஸ்ரிக் வாளிகள் பெற்றோமாக்ஸ் உட்பட இவற்றின் பெறுமதி ஒன்றரை லட்சம் ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக அத் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

## JAFFNA COLLEGE

### English Medium Classes

Advanced Level classes in all the usual Science and Arts subjects for students who want proficiency in these subjects in the English medium and who may also want to subsequently appear for the Advanced Level Examinations of the London University and the Associated Examining Board will commence on 2nd September, 1985.

Ordinary Level classes will also be conducted on the same basis if there are sufficient applicants.

Further information may be obtained from the Principal.

PRINCIPAL

Jaffna College,
Vaddukoddai. 116

## St. John's College, Jaffna AND Chundukuli Girls' College, Jaffna.

ADMISSION — 1986

1. Vacancies exist ONLY in the following Classes;- Year One and Year Seven.
2. Children born between 01/02/1980 and 31/01/1981 only will be considered for admission to year One. Birth Certificate should be annexed along with the application.
3. Pupils to be considered for admission to Year Seven should be below the age of twelve on 31/01/1986.
4. Apply before the 13th of September, 1985 on forms available from the respective Schools from the 3rd of September, 1985.
5. Please send stamped addressed long size envelope and Postal Order drawn in favour of the "Principal" for Rs. 20/- per Application Form for year Seven, and Rs. 10/ for Year One.
6. Admission Test (for Year Seven only) will be held at 8-30 a.m. on Saturday the 12th October, 1985.

495 PRINCIPAL.


## யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம் மக்கள் நிறுவனம்

மக்களின் ஒத்துழைப்பையும் பேராதரவையும் வேண்டிநிற்கிறது.

ஒன்றுபட்டால் உண்டே வாழ்வு ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வே.

The Jaffna Co-operative Stores Ltd., 420, Hospital Rd., Jaffna.

Tel; 22438, 22370, 22537

பாலகன் V.V.
(சாந்தி முன்பாக)
Daily 5 Shows
Charles Heston, Richard Harris
in
Major Dundee

நியூ சாந்தி மினி
10-30, 2-30, 4-30, 6-30
Pending Grievences
[JUNGLE WOMEN]
—இன்று மட்டும்—

ஸ்ரான்லி மினி
5'X5' திரைவானில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
LAST ORGY
ஹிற்லர் ஆட்சியில் தீவிரவாத பெண்களுக்கு செய்த கொடுமைகளும் அவர்கள் படும் துன்பங்களையும் சித்தரிக்கும் படம்.
Adults only

மேஃபெயர் மினி சினிமா
(கன்னாதிட்டி காளிகோவில் அருகில்)
10-30, 4-45, 7-00
"Basket Case"
தன் உடலில் ஒட்டிப் பிறந்த ஒரு அரை உருவம் கொண்ட பயங்கர ரகுலாவின் திகில் நிறைந்த கதை.

வெலிங்டன்
10-30, 2-15, 4-30, 6-45,
திகதி: 14 - 15
THEATRE OF DEATH
16 முதல்
DRAGON DIES HARD
(புரூஸ்லியின் படம்)
முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் காட்டப்படுகிறது.

விஜோ சினிமா
10-30, 2-30, 6-30
2-வது மாதமாக ஓடுகிறது!
தியாகராஜன், சிவச்சந்திரன், பூர்ணிமா ஜெயராம், இலக்சுமிதா, ஜெய்சங்கர் நடித்த
பாலு மகேந்திராவின்
நீங்கள் கேட்டவை
ஈஸ்ட்மன் கலர்

உஷா மினி
10-30, 2-30, 4-45, 6-45
CODE NAME WILD GEESE
மிக நவீன ஆயுதங்களுடன் 6 கொமாண்டோக்கள் கொண்ட கொரில்லா கோஷ்டி இராணுவ முகாம் மீது தாக்குதல்

குமரன் மினி சினிமா
10-30, 2-30, 4-30, 6-30
Gods Gun
[War Film]
பயங்கர சண்டைகள், குதிரை ஓட்டங்கள் நிறைந்த படம்

"லதா" மினி
(கோண்டாவில்)
10-30, 3-30, 6-45
விஜய்காந், நளினி, பேபி ஷாலினி
அமுத கானம்

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-30, 6-00
முத்துராமன் - ஜெயலலிதா தங்கவேலு
கணவன் மனைவி

மனோகரா
வெண் திரையில்
எம். ஜி. ஆர். வைஜந்திமாலா, நம்பியார் பாலையா நடித்த
பாக்தாத் திருடன்
புதிய பிரதி
கடைசி சில தினங்கள் மட்டும்

S.T.L. மினி சினிமா
திருநெல்வேலி
10-30, 2-15, 5-15
எம். ஜி. ஆர். பத்மினி நடித்த
மன்னாதி மன்னன்
20 முதல்—
சிவாஜி, பானுமதி
கள்வனின் காதலி

லிபேர்ட்டி மினி
10-30, 12-30, 2-30, 4-45, 7-00
INTRUSION CAMBODIA
பார்த்தால் தெரியும். பார்த்துவிட்டால் புரியும். இன்றைய இளைஞரின் நாளைய சரித்திரம். தவறவிட்டு கவலைப்படாதீர்கள்.

நியூ சினிமாலயா
[R. G பில்டிங் மேல்மாடி]
The Bounty Hunters
10-30, 2-30, 4-30, 6-30
பயங்கர குதிரை ஓட்டம் துப்பாக்கிச்சூடு, கொலை, கொள்ளை, இளம் மங்கையரின் இன்னிசை நடனம் நிறைந்த படம்.
5X5 வெண்திரையில்

சரவணபவன் மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-30, மட்டும்
Private-Lessons
15 வயது பணக்கார சிறுவனின் teen age ஆசைகளை பயன்படுத்தி பணம் பறிக்க வேலைக்காரப் பெண்ணைத் தூண்டும் நன்றிமறந்த கார்றைவர் பாலியல் ஆசையைத் தூண்டி சிறுவனைக் கெடுக்கும் வேலைக்காரப்பெண் ஏதும் அறியா கெடுக்கப்பட்ட சிறுவன் வேலைக்காரப் பெண்ணை மானசீகமாக காதலிக்கும் விபரீதம் teen age வயதில் இளைஞர்கள் செய்யும் குறும்புகள்.
(கண்டிப்பாக வயது வந்தோருக்கு மட்டும்)

# இளைஞர்கள் நடத்திய 'கசிப்பு' வேட்டை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் அன்னங்கை கிராமத்தில் திடீரென உட்புகுந்த இளைஞர் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நண்பகல் வேளையில் கோடரி, துப்பாக்கி இவைகளுடன் வானில் வந்த இளைஞர்கள் சகல வீடுகளிலும் உட்புகுந்து அங்கு கசிப்பு உற்பத்திக்கென பாவிக்கப்பட்ட உபகரணங்களைச் சேதப்படுத்தியதின் மூலம் அப்பகுதியில் 'கசிப்பு ஆறுக' பெருக்கெடுத்தது.

வந்தவர்கள் சில வீடுகளில் இருந்த மோட்டார் சைக்கிள்களையும் எடுத்துச் செல்லமுற்பட்ட போது சிலர் தலையிட்டதன் நிமித்தம் அது கைவிடப்பட்டதாம் சில இடங்களில் சம்பந்தப்பட்ட இளைஞர்களுக்கும், கசிப்பு உற்பத்தியாளர்களுக்குமிடையே 'மோதல்' ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது. (ரா)

# இன்றைய பலன்

மாதம்—ஆவணி
திகதி—3 (10-8-1985)
வாரம்—திங்கள்
திதி — திருதியை முற்பகல் வரை
நக்ஷத்திரம் — உத்தரம் பிற்பகல் வரை

மேடம்:- இன்று அவதானம் நன்று. வீண்பேச்சு வார்த்தைகளால் விபரீதங்கள் விளையலாம். உதவி செய்வோரே உபத்திரவத்தையும் செய்வர்.

இடபம்:- பெரியோர்களின் சந்திப்பு இன்று நிகழும் உயர்ந்த எண்ணங்களால் உயர்வுக்கு வழிபிறக்கும். பிதாவழிச் சுகமும் உண்டு.

மிதுனம்:- தொழில், பொருள் இவைகளில் இன்று கவனம் வேண்டும். எதிர்பாராத நஷ்டங்களும் ஏற்படலாம் விழிப்புடன் செயலாற்றவும்.

கடகம்:- உள்ளத்தில் உவகை துள்ளும். உறவினர்கள் ஆதரவும் உண்டு லாபகரமான விடயங்களில் கவனம் வேண்டும்.

சிங்கம்:- இனந் தெரியாத கவலையால் சோர்வடைவீர் இதய பாரம்தலைதூக்கும். இல்லத்திலும் சச்சரவுகளுக்கு இடமுண்டு.

கன்னி:- உமது நிலையில் சிறிது மாற்றமேற்படும். மனதிலும் மகிழ்ச்சி தொன்றும் உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும்.

துலாம்:- குடும்பத்தில் அமைதி குன்றும். குறுக்கு வழித்தலையீடு தவிர்க்கப்படல் வேண்டும் நண்பராலும் வரவுக்கு இடமுண்டு.

விருச்சிகம்:- முன்னேற்றம் தடைப்படும். முதியவர் ஒருவரின் உபதேசம் திருப்தியைத் தரும். இன்று எதிலும் முன்னெச்சரிக்கை நன்று.

தனுசு:- விலைபொருளினால் நஷ்டமடைய நேரும் ஆத்திரப்படுவதால் அருமையான சந்தர்ப்பத்தையிழக்க வேண்டிவரும் அமைதி நன்று.

மகரம்:- பிள்ளைகளினால் பெருமைக்கு இடமுண்டு செய்தொழிலாலும் நன்மையுண்டு இனசன மத்தியில் சோர்வுக்கு இடமுண்டு.

கும்பம்:- மறைமுகதாக்குதலுக்கு திட்டமிடப்படலாம், விழிப்புடன் செயலாற்றவும். இன்று பிரயாணத்தை பின்போடவும்.

மீனம்:- குடும்பவழிச்சுகமும் உண்டு. குறிக்கோளிலும் நன்மை ஏற்படும். இன்று எதிர்பாராத பணமுடை தோன்றும்.

திருமலை
= வே. ரவீந்திரன் =

# வவனியா சம்பவம்: 2000 பேர் வீடு இழந்தனர்

(யாழ்ப்பாணம்)

வவனியாவில் இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து சுமார் 2ஆயிரம் பேர் வீடுகளை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் ஒருபகுதியினர் ஆலயங்களிலும் நகரங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். இன்னொரு பகுதியினர் கடந்த இரு தினங்களாக யாழ்ப்பாணம் போன்ற வேறிடங்களுக்குச் சென்றுள்ளனர்.

வவனியா நகரம் வெறிச்சோடிக்காணப்படுகிறது. (மா)

# ஆபாசபடங்கள், போதைவஸ்து 'ரெஸோ' போர்க்கொடி!

(யாழ்ப்பாணம்)

ஆபாசத் திரைப்படங்களைக் காண்பிப்போருக்கு எதிராகவும் போதைப்பொருள்களை விற்போருக்கு எதிராகவும் தமிழீழ மாணவர் பேரவை [ரெஸோ] போர்க்கொடி தூக்கியுள்ளது.

இதுசம்பந்தமாக தமிழீழ மாணவர் பேரவை அறிக்கை ஒன்றை நேற்றுவிடுத்துள்ளது

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

'தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் இளைஞர்கள், முதியோர்கள் என்ற வேறுபாடின்றி தமிழ்ப்பேசும் மக்களனைவரும் போராடவேண்டிய இந்தக் காலகட்டத்தில், தமது சொகுசான வாழ்க்கைக்காக, பலரின் வாழ்க்கையைப் பாழாக்கி, குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க முயலும் சில சமூக விரோத சக்திகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் எமது இளைஞர்கள். குறிப்பாக மாணவ சமுதாயத்தின் எதிர்கால வாழ்க்கை சூன்யமாக்கப்படுவதுடன், எதிர்காலத்தில் கலாசார சீரழிவுமிக்க, ஒழுக்கக்கேடான ஒரு சமுதாயத்தின் தோற்றத்திற்கான நச்சு விதையும் விதைக்கப்படுகின்றது. அத்துடன் இந்நடவடிக்கைகள் எமது இளைஞர்களின் விடுதலைப் போராட்ட உணர்வைத் திசைதிருப்பி, மழுங்கடிக்க வைக்கின்றன.

''மேற்கத்தைய கலாசார சீரழிவின் பிரதி பிம்பங்களான ஆபாசப்படங்களும், வன்முறையைத் தூண்டக்கூடியதும், இளம் உள்ளங்களின் மத்தியில் பயந்த சுபாவத்தை தோற்றுவிக்கக்கூடிய விபரீதமான கற்பனை கொண்ட திரைப்படங்களும், பண வசூலை நோக்கமாகக்கொண்ட சமுதாய நோக்கற்ற, தணிக்கை செய்யப்படாத தமிழ் மசாலாப்படங்களும், மழைக் காலக் காளான்கள் போல பாடசாலைகள், மாணவ சமுதாயம் கூடும் மற்றும் இடங்களிலும் தோன்றியுள்ள சுகாதார வசதியற்ற, இடநெருக்கடிமிருந்த மினித்தியேட்டர்களில் திரையிடப்படுவதால் கல்வி கற்கும் நேரத்திலும், மாணவர் அங்கு சென்று தமது வாழ்க்கையை பாழாக்குகின்றனர். லத்தீன் அமெரிக்காவிலும், பிலிப்பைன்ஸ், தென்கொரியா, தாய்லாந்துபோன்ற நாடுகளிலும் மக்களின் போராட்டத்தை திசைதிருப்ப ஏகாதிபத்தியவாதிகள் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்து வருகின்றனர்.

''எனவே எமது சமுதாயத்தைச் சீர்கெடுக்கக்கூடியதும், பெண்ணடிமையை நிலைநாட்டி பெண்களை இழிவுபடுத்துவதுமான ஆபாசத்திரைப்படங்களைத் திரையிடுவோரையும், இளஞ்சந்ததியினரை தவறான வழியில் இட்டுச்செல்லக்கூடிய கசிப்பு, போதைவஸ்துக்களையும் [அபின், ஹிரோயின், கஞ்சா] போன்றவற்றை விற்போரை இச்சமூகவிரோதச் செயல்களை உடனடியாக கைவிடும்படி தமிழீழ மாணவர் பேரவை கேட்டுக்கொள்கின்றது ஏற்கனவே இவ்வாறான செயல்களைத் தமிழீழ மாணவர் பேரவை கண்டித்துள்ளது. தொடர்ந்தும் இவ்வாறான செயல்கள் நீடித்தால், தமிழீழ மாணவர் பேரவை கடுமையாக நடந்துகொள்ள வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படும் என்பதனையும், சம்பந்தப் பட்டவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றது'' [மா]

# முதலுதவிச்சேவை

[யாழ்ப்பாணம்]

இம்மாதம் 21ம் திகதி ஆரம்பமாகும் நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு உற்சவகாலம் முடியும்வரை சென் ஜோன் அம்புலன்ஸ் படையின் முதலுதவிச்சிகிச்சை முகாம் ஆலயவீதியில் இயங்கவிருக்கிறது. (ச)

# மகாஜனாவின் பவளவிழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் 75 வது ஆண்டுப் பூர்த்தியினையொட்டிய பவள விழா அக்டோபர் மாதத்தில் கொண்டாடப் படவிருக்கின்றது

விழாத்தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று நேற்றையதினம் கல்லூரியில் நடைபெற்றது. (நா)

# நீதிமன்றத்தில் கொள்ளை

[வேலணை]

ஊர்காவற்றுறை மாவட்ட நீதி மன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஆயுதம் தாங்கிய இளைஞர் கோஷ்டியினர் மாவட்ட நீதிமன்ற காவலாளியைக் கட்டிவைத்துவிட்டு பெறுமதிமிக்க பல பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றனர். (பி)

# மகா கும்பாபிஷேகம்

(கொழும்புத்துறை)

யாழ். வண். வடமேற்கு பிரப்பம்மதி திருப்பதி ஸ்தல விருட்சத்தில் தான்தோன்றியாக உதித்த அருள்மிகு ஸ்ரீ வைரவப்பெருமானுக்கு நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் 22ம் திகதி நடைபெறும்.

பிரதம குருக்கள் சிவாகமக் கிரியா கலாமணி சிவஸ்ரீ. சாம்பகணேசக் குருக்கள் தலைமையில் பிரதிஷ்டாகுருமார்கள் மகா கும்பாபிஷேகத்தை நடாத்துவர். மண்டலாபிஷேகம் தொடர்ந்து 28 நாட்கள் நடைபெறும்.

மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 22ம் திகதி முதல் தொடர்ச்சியாக 25 தினங்கள் சுப. கணேசசுந்தரன் மகா பாரதம் சங்கீதக்கதாப்பிரசங்கத்தை நிகழ்த்தவுள்ளார்.

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# மகாவலி நீர்பாயும் பகுதியில் இஸ்ரேலிய ஊடுருவல்!

## வர்த்தகத் தடையும் நீக்கப்படும்?

(கொழும்பு)

மகாவலி நீர்பாயும் புதிய நிலப்பிரதேசங்களிலும், இஸ்ரேலிய ஊடுருவல் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இஸ்ரேலியர்கள் சிலர் இலங்கையில் வரண்ட பகுதிகளில் விவசாய விரிவாக்கப்பணிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்களே மகாவலி நீர்பாயும் புதிய காணிப்பகுதிகளிலும் செயல்படவுள்ளனர் இப்புதிய நிலப் பகுதி கிழக்கு மாகாணத்தில் பெரும்பகுதியை உள்ளடக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இஸ்ரேல் மீது இலங்கைவிதித்திருந்த நெருக்கமான பொருளாதார ஒத்துழைப்பு மீதானதடையும்விரைவில் நீக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதன்மூலம் இஸ்ரேலின் இலங்கையுடனான தேயிலைவர்த்தகம் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது ஆயினும் இக்கொடுக்கல் வாங்கல் அரபு நாடுகள் இலங்கையுடன் கசப்புணர்வு கொள்ள வழியமைக்கும் என்றுதெரிவிக்கப்பட்டது. ஏனெனில் இந் நாடுகள் 35 சதவீதம் இலங்கைத்தேயிலையை இறக்குமதி செய்கின்றன.

இலங்கையில் இஸ்ரேலியத் தூதர் ஒருவரும் நியமிக்கப்படும் சாத்தியம் காணப் படுகிறது. இலங்கையில் இஸ்ரேலியநலன்காக்கும்பிரிவு அமெரிக்க தூரதரத்தில்இயங்குகிறது இதன் தலைவராக அஸ்ரின் கார்ணி என்பவர் இருக்கிறார். இவரைத் தொடர்ந்து புதிதாக இப்பதவிக்கும் நியமிக்கப்படவுள்ள வில்செயின் என்பவர் இஸ்ரேலியத் தூதராகலாம் எனத்தெரிவிக்கப்பட்டது. (கி)

## மரண அறிவித்தல்

### இணுவில் கந்தையா குமரதாசன்

அராலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இணுவில் வாசியுமான கந்தையா குமரதாசன் ஓய்வுபெற்ற இரசாயண நிபுணர் (பீ சி சி நிறுவனம்) காலமாகிவிட்டார். இவர் மகாலட்சுமியின் அன்புக்கணவரும், Dr மங்களேஸ்வரன், முனியனிவரி குமரேஸ்வரன், ஞானேஸ்வரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஐயரத்தினம், பூம்புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார் அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை (19-8-85) காலை 10 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

129 அறிவித்தல்: ஞானேஸ்வரன்.

## மரண அறிவித்தல்

### வீரகத்தி நடேசன் (ஈசன்)

மலர்வு: 18-01-1966 உதிர்ப்பு: 17-8 1985

அனலைதிவு வீரகத்தி நடேசன் சித்தப்பா) அகால மரணமானார். அன்னார் வீரகத்தி வள்ளியம்மை தம்பதிகளின் அருமை புதல்வனும், பாலசுப்பிரமணியம், யோகராணி, ரஞ்ஜினிதேவி, செல்வராசா, புஷ்பராணி, ஸ்ரீதரன், குமாரணி ஆகியோரின் அருமைச் சகோதரரும், ஜெகஜோதியின் மைத்துனரும், திருமதி வையாபுரி மனோன்மணியின் அருமைப்பேரனும். பேரம்பலம், திருமதி அ சிவகாமிப்பிள்ளை, திருச்செல்வம், அன்னலட்சுமி ஆகியோரின் அருமை மருமனுமாவார். உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்

125 மயிலணி ஒழுங்கை, சுன்னாகம்.

## மரண அறிவித்தல்

### S. W. நவரத்தினம்

(கந்தப்பளை)

S W நவரத்தினம் காலமானார். இவர் தங்கரெத்தினத்தின் அருமைக்கணவரும் பத்மா இங்கிலாந்து நவபாலச்சந்திரன் (அமெரிக்கா), தவபாலச்சந்திரன் (இங்கிலாந்து), தவபாலதேவி (ருஜு) ஸாம்பியா ஆகியோரின் அருமைத் தந்தையும், ஸ்டரின்பநாயகம் (இங்கிலாந்து), மனோமகள் (அமெரிக்கா), ரேகினி (இங்கிலாந்து), விஜயநாயகம் ஸாம்பியா) ஆகியோரின் அருமைமாமனாரும், திருமதி தங்கம்மா செபஸ்தியான், காலஞ்சென்ற நாகலிங்கம், துரைசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராதிகா, தேனுகா, வேணுகா, றூபிகா, றூபகன், அகல்யா, அருண், நவாஞ்சன், ஜெயரஞ்சன, ஜெனிரேகா, சுகன்யா, சுஜீவ் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார். அன்னாரின் மரணச் சடங்குகள் பற்றியவிபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

'சந்திரோதயம்'
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

தங்கரத்தினம்,
நவரத்தினம்.
122

(கிளிநொச்சி)

வவனியாவில் கடந்தசில நாட்களாக இடம்பெற்றுவரும் கோரச்சம்பவங்களை அடுத்து சுமார் 150 பேர் இடம்பெயர்ந்து கிளிநொச்சிநகரை வந்தடைந்தனர். புகைவண்டிமூலம் வந்த இவர்கள் பாதுகாப்பாக கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் உள்ளனர்.

கிளிநொச்சிபிரஜைகள்குழுத் தலைவர் வண. பிதா. ம. இ. பயஸ் அடிகளார் பிரஜைகள் குழுஉறுப்பினர்களுடன் விரைந்து தஞ்சமடைந்த மக்களுக்கு உணவு மற்றும் வசதிகளைச் செய்துகொடுத்தார் பத்திரிகையாளர் வசகர் நலன்புரிச்சங்கத்தினரும் இவர்களுக்கான உதவிகளை வழங்கினார்கள்.

# வவனியா சம்பவம்: கிளிநொச்சியில்பலர் அகதிகளாக தஞ்சம்

வவனியாகூசைப்பிள்ளையார் குளம், சகாயமாதா கோவிலடி, தெம்பைக்குளம், பூந்தோட்டம் முதலானபகுதிகளில் இருந்து உடமைகளை கைவிட்ட நிலையில் இவர்கள் இங்குவந்துள்ளனர்

இவர்களில் 5 பிள்ளைகளுடனும் மனைவியுடனும் வந்துள்ள மவு. செபமாலை வவனியா நிலைமை பற்றி தெரிவித்ததாவது:- நாங்கள் இருந்தபகுதிகளைச் சுற்றி ஒரே வெடிச் சத்தமும் மரண ஓலமுமாக இருந்தது எங்கும் புகைமண்டலம் வவனியா நகரைச்சூழ்ந்திருந்தது உயிரைக்காப்பாற்ற காட்டிற்குச்சென்றோம் பதுங்கி இருந்த பின்னர் தேவாலயம் ஒன்றில் தஞ்சமடைந்து கிளிநொச்சிக்கு வந்தடைந்தோம் என்றார்.

15 வயது நிரம்பிய சி ஜீவா தெரிவித்ததாவது: நாங்கள் இருந்த கூசைப்பிள்ளையார் குளத்தைச் சுற்றி அப்பளம் பொரிவதுபோல் வெடிச்சத்தம் கேட்ட வண்ணமே இருந்தது உடனடியாக ஆலயம் ஒன்றிற்கு சென்று தஞ்சமடைந்தோம் எமதுசகோதரர்கள் 12 பேர் இங்கு வந்துள்ளோம் அப்பா அம்மா வவனியாவிற்கு சென்றவர்கள் இவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை என சோகமே உருவாக தெரிவித்தார்

கிளிநொச்சியில் தஞ்சமடைந்தோரில் பலர் இன்னமும் அதிர்ச்சியில் இருந்து விடுபடாத நிலையில்காணப்பட்டனர்.

## மடு ரயில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தப்படையினரின் உதவியுடன் முருங்கன் இராணுவ முகாமுக்கு அருகில் உள்ளபழைய பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுபராமரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இறந்த இரு பெண்களின் சடலமும் காயமடைந்தவர்களும் நேற்று அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அவர்களின் விருப்பத்தின் பேரில் அனுராதபுரத்துக்கு இ.போ.ச மூலம் இன்று அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்களைத் தேடும் நடவடிக்கையில் ஆயுதப்படையினர் ஈடுபட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது

சம்பவம் நடந்த இடங்களை மன்னார் மாவட்ட ஆயர் வண சௌந்தரநாயகம், அரசாங்க அதிபர் ஜனாப் எம். எம். அப்துல்காதர் மற்றும் இணைப்பதிகாரி, சமூக சேவை பணிப்பாளர் ஆகியோர் ஹெலிக்கொப்டரில் சென்று நிலைமைகளை அவதானித்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (மா)

## வாழ்வாயினும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது "இதுவரை காலமும் ஈ. தே. வி. மு. அனுசரித்துவந்த போர் நிறுத்தம் கைவிடப்படும்.

இலங்கையில் தமிழர்கள் கொலை செய்யப்படும் போது நாம் சும்மாயிருந்து விடமுடியாது. அரசாங்கம் போர் நிறுத்தத்தையும் மீறியுள்ளது. எனவே ஈ. தே. வி. முன்னணியில் உள்ள 4பிரதான இயக்கங்களும் கூட்டு ராணுவ நடவடிக்கைகளில் இறங்க முடிவு செய்துள்ளன. (கி)

## நகை அடகுப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கையைத் தொடர்ந்து யாழ் மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளின் முன்னிலையில் அடகுவைத்தவர்கள் மறியற்போராட்டம் நடத்தியதும், அதனால் வங்கி அலுவல்கள் தடைப்பட்டிருந்ததும் தெரிந்ததே.

மற்றைய மக்கள் வங்கிக் கிளைகளில் அடகுவைத்து அதனைமீட்பதற்குப் பணம் செலுத்தியவர்களுக்கும் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு வாராவாரம் நகைகள் மீளளிக்கப்படுமென்றும் முகாமையாளர் தெரிவித்துள்ளார் [மா]

## திருமலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

நிலாவெளி துவரங்காடு பிரதானவீதி ஓரமாகவுள்ள வீடுகள் பல தீக்கிரையாக்கப்பட்டதாகவும் பலர் படுகாயமுற்றுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது

திருகோணமலை ரயில் நிலையச் சந்தியில் வயோதிபர் ஒருவர் நேற்றுக்காலை பலத்த வெட்டுக்காயங்களுக்குள்ளானதாகவும், இருவர் தாக்குதலுக்குள்ளானதாகவும் கூறப்படுகிறது

ஆயுதப்படையினரும் ஊர்காவல் படையினரும், நிலாவெளி துவரங்காடு, சாம்பல்தீவு ஆகிய இடங்களில் மேற்கொண்ட சோதனையின்போது இச்சம்பவங்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவங்களைத் தொடர்ந்து ஏராளமான தமிழர் குடும்பங்கள் தங்கள் சொந்த வீடுகளில் இருக்கமுடியாமல் வேறிடங்களில் தஞ்சம் புகுந்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (மா)

## திம்பு பேச்சை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுக்களை முறித்துக் கொண்டமைக்கான பிரதான காரணங்களாகும்

இருந்த போதிலும், இந்தியா இப்பேச்சுக்களை மீண்டும் தொடரச் செய்யவே தீவிர முயற்சி எடுத்துள்ளது எனவே இன்னும் ஓரிருதினங்களில் இருசாராரும் மீண்டும் சந்திக்கலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் 'திம்பு சமரசப் பேச்சுக்கள் சர்வதேச ரீதியில் இந்தியாவுக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளன. எனவே இப் பேச்சுக்களை தொடர்ந்து நடத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு இந்தியா தள்ளப்பட்டுள்ளதாகவும் அரசியல்அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்

எனவே இருசாரார் மீதும் இந்தியாவின் திம்பு தொடர்பான அழுத்தம் அதிகரிக்கப் படலாமெனவும் தெரிய வந்துள்ளது. (கி)

## மன்னார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் கூறப்படுகிறது.

தீவிரவாதிகள் ரயிலைவிட்டுச் செல்லும்பொழுது 'வாகன் பெட்டியில்' மன்னார்ப் பகுதியிலிருந்து தாங்கள் ஏற்றிவந்த வாகனமொன்றையும் வாகனிலிருந்து இறக்கி ஓட்டிச்சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து மதவாச்சி ரயில்நிலையத்தில் திடீர்ப் பதற்றநிலை ஏற்பட்டது அங்குநின்ற மக்கள் நாலாபக்கமும் சிதறி ஓடத் தொடங்கினர்.

## திருமலையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று மேலும்தெரிவிக்கப் பட்டது.

இராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் இதனைத் தெரிவித்தார். [பெ-கி]

## தமிழ்க் குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

திரு டிகஸிற் மேலும் கூறியதாவது:-

"பூட்டானில் பேச்சுக்கள் நடத்திய இலங்கை அரசு தரப்பினரும், தமிழ்க் குழுக்களும் திம்புவிலேயே தொடர்ந்து இருந்துவருகின்றனர்

அங்கிருந்து எவையும் வெளியேறவில்லை அவற்றை மீண்டும் சந்திக்கவைப்பதற்கான முயற்சிகளைத் திரு ரொமேஷ் பண்டாரி தீவிரமாக மேற்கொண்டுள்ளார் இந்தியா பேச்சுக்களைத் தொடரச்செய்வதில் நிச்சயம் வெற்றி பெறும்" என்றார்.

இதேவேளை தமிழ்க் குழுக்கள் இன்று சென்னைக்குத் திரும்பும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது ஆனால் இது குறித்து திரு டிக்ஸிற் மறுப்புத் தெரிவித்தார். (கி)

## மெயில் ரயில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரவு தபால் ரயில்வண்டிகளும் உடனடியாக ரத்துச்செய்யப் பட்டுள்ளதாகப் போக்குவரத்து அமைச்சர் எம் எச். மொகமட் அறிவித்துள்ளார்.

தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்துவார்களேயானால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான ரயில் சேவை முற்றாக இடைநிறுத்தப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

வன்முறைச் சம்பவங்களை இடைநிறுத்திவைப்பது என்ற உடன்பாடு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தாம் இரவு தபால்சேவை உட்பட வழமையான ரயில் சேவைகளை மீண்டும் ஆரம்பி பதற்கு உத்தரவிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P.O. Box 49, Telegram Eelanadu, Telephone; 22389, 24126.